
REGISTERED NO. M, 1454.





# THE NADAR KULA MITRAN.

அருப்புக்கோட்டை நாடார் கல்விப் பிரசங்க சபையினின்று

வெளிவரும்.

“கண்ணுடைய ரென்பவர் கற்றோர் முகத்திரண்டு
புண்ணுடையர் கல்லாதவர்” (திருக்குறள்)

நாடார்குல மித்திரன் சந்தா விபரம்.

இந்தியா, பர்மா, சிலோன் முதலிய உள்நாட்டிற்கு வருடம் 1-க்கு ரூ 3-8-0.
சிங்கப்பூர், பினாங்கு, மலாக்கா முதலிய வெளிநாட்டிற்கு வருடம் 1-க்கு ரூபா 4-0-0.

நாடார்குல மித்திரன் விளம்பர விகிதம்.

கலம் 1-க்கு தடவை 1-க்கு ரூபா 6-0-0.
சில்லரை விளம்பரம் அங்குலம் 1-க்கு ரூ 0-4-0
நீண்டகாலம் விளம்பரஞ் செய்வோர் மானேஜருக்கு எழுதவும்.

பத்திராதிபர், சூ. ஆ. முத்துநாடார் பத்திராசிரியர்

மலர் 4 ] ருத்ரோத்காரி ஹு வைகாசிமீ 19உ வெள்ளிக்கிழமை (அருப்புக்கோட்டை) 1923ஹு ஜூன்மீ 1உ [ இதழ் 28

இனாம்! இனாம்!!

## பெருங்காயம் செய்யும் முறை.

எமது மல்லிகா ஆயில் என்னும் சிறந்த கூந்தல் தைலம் 3 பாட்டல் வாங்குபவர்களுக்கு ஒரு பெருங்காயம் செய்யும் முறை இனாமாய் அனுப்பப்படும். இம் முறையைக்கொண்டு ஒவ்வொருவரும் சக்திக்கேற்றபடி பெருங்காயஞ்செய்து, விற்பனை செய்வதால் ஜீவனம் செய்யலாம். மல்லிகா ஆயில் 3 பாட்டல் விலை ரூ 2. தபால் செலவும் இனாம்.

K. N. S. & Co ARIMALAM.

## சென்னையில்.

## நாடார் போஜனசாலை.

பர்மா, பினாங்கு, சிங்கப்பூர் போகிற ஜனங்கள் தங்கிப் போவதற்குத் தகுந்த சௌகரியமுண்டு.

S. பழனியப்ப நாடார்,
மலையப்பெருமாள் வீதி கெ 59 வீடு.
மதராஸ்.



## புதிய ஹோட்டல்.

ஐயா! தூத்துக்குடி யென்ற திருமந்திர நகரில் சாப்பாடு, காப்பிகிளப் முதலியவைகள் தக்கவசதி மிக்க இல்லையென பலரால் சொல்லக்கேள்விப்பட்டு சௌகரியத்தை தர விருதுபட்டியிலிருந்து முன் வந்த எங்கள் ‘நவீன சுகபோஜன சாலையை’ இந்நகர் மேலூர் ரயில்வே ஸ்டேஷனுக்கு எதிரே மகா-ள-ள-ஸ்ரீ கனம் F. S. பெரையா அவர்கள் கட்டிடத்தில் ஸ்தாபனம் செய்திருப்பதால் சகல நாடார் கனவான்களும் உணவு அருந்தியெங்களை கௌரவப்படுத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். இப்படிக்கு

புரோப்ரைட்டர்கள் விருதுபட்டி. { எஸ். எஸ். கருப்பையா நாடார். எஸ். ராமசாமி நாடார்

ஓர் உண்மையான ஔஷதம்.

## மதனகாமேஸ்வர தாதுபுஷ்டி லேகியம்.

இவ்வுத்தம ஔஷதமானது சில அபூர்வமான மூலிகைகளின் சத்துக்களாலும், அதிக விலையுயர்ந்த வஸ்துக்களாலும், சுயமான தங்க பஸ்பமும் கலந்து முடிக்கப்பட்டது. நீண்டகாலமாய் உபயோகித்த அநுபவத்தில் புகழ்சிறந்து விளங்குவது. குணஞ்செய்வதிலிருந்தும் ஒருக்காலும் தவறாது. இதனை டைரக்ஷனில் சொல்லியபடி உட்கொண்டு வருவதினால் அக்கினிமாந்திய ரோகம் நீடித்த மலபந்தம் பித்தாதிக்க ரோகம், அஜீர்ணரோகம், வாதப்பிடிப்புரோகம், தலைவலி, சரீரம் இளைத்து துர்பலமாயிருத்தல், இந்திரியம் நீர்த்துவிழுதல், வெள்ளை, வெட்டை, நீரிமேகம் இதன் வகுப்பில் சேர்ந்த 12 வகையும் க்ஷயம், காசம், குன்மம், பாண்டு, சோகை, நீரிழிவு முதலிய கொடியரோகங்களை நிவர்த்திப்பதில் வல்லமையுள்ளது. இது கெட்ட இரத்தத்தை சுத்தப்படுத்தி இரத்தத்தையும் இந்திரிய விர்த்தியும் அக்கினி விர்த்தியும் உண்டாக்குவதுடன் சரீரம் பீமனைப்போன்ற பலமும் உண்டாக்கி மலஜலவிஸர்ஜனத்தையும் ஒழுங்குபடுத்தி சரீரமும் திடகாத்ரமாய் ஆரோக்கியமாகவிருக்கும்

இந்த அதிர்ஷ்டகாலத்தை வீணாக்க வேண்டாம். ஒரு முறை வாங்கி உபயோகித்துப் பார்த்தால் இதன் உண்மை விளங்கும். 24-நாள் சாப்பிடும் மருந்தடப்பி. 1க்கு விலை ரூ 3-0-0 தபால் சார்ச்சு இனாம்.

N. G. ராஜா அண்டு கம்பெனி,
மருந்து ஷாப் கெ 182.
பெரியகடை வீதி, திருச்சி

## விளம்பரம்.

Just arrized Buy Ons



அரிகோ என்னும் அநேகவித போட்டோ படங்கள் காண்பிக்கும் பூதக் கண்ணாடி- இதை ஜெர்மெனி தேசத்தில் கண்டுபிடிக்கப்பட்டு புதிதாய் வெளியிடப்பட்டது. இதில் முஷ்டி யுத்தங்கள், யந்திர சாலைகள், சீனதேசத்தின் ஜாலக்கு வித்தைகள், சர்க்கஸ் காட்டு மிருகங்கள், பிரான்சு தேசத்தின் ஸ்திரீ புருஷர்களின் கொண்டாட்டங்கள் இன்னும் அநேக ஆச்சரியமான படங்களுடன் சேர்ந்து 3 போட்டோ படங்கள் செட் 1-க்கு ரூ 1—3—0
மகாத்மா காந்தி போட்டோ மோதிரம் 1-க்கு ரூ 1—0—0
போட்டோ கிராப் மோதிரம் 1-க்கு ரூ 0—12—0

விலாசம்:—
எஸ். பதி அண்டு பிரதர்ஸ்,
கெ-21 முல்லாசாகிப் தெரு
சௌகார்பேட்டை போஸ்டு, மதராஸ்.

தபால் பெட்டி 555. தந்தி விலாசம். “ முக்குத்தாள் ”

உலகெங்கும் புகழ்பெற்ற

# பட்டணம் பொடி

காரம், நிறம், வாடை, குணம், மணம் இவ்வைந்தும் ஒருங்கே அமையப் பெற்று தினசரி நூற்றுக்கணக்கான பார்சல்கள் அனுப்பப்பட்டு தங்கமெடல் வெள்ளி மெடல் பரிசுபெற்று தினசரி நற்சாக்ஷிகள் குவிகின்றன.

என். வி. ஷண்முகம் கம்பெனியார்,
பட்டணம் பொடி தொழிற்சாலை,
மதராஸ்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

## பந்தி போஜனம்.

### பேதா பேதமற்ற பந்தி போஜனத்தை காரியத்தில் காட்டவேண்டும்

(பினாங்கிலிருந்து வெளிவரும் தேசாநுகூலன் என்ற பத்திரிகை தீண்டாதோர் தலையங்கத்தில் பின்வருமாறு எழுதுகிறது.)

இருநில மடனில் உதித்த மக்கள் எத்தன்மையானவரும் ஒத்த பிறப்பினர் என்பதை ஒத்துக் கொள்ளார் உண்டோ சொல்லோ. ஒத்துக்கொள்ளார் இன்றுஇன்று. அப்படி ஒத்துக் கொள்ளும் விஷயமானால் உலகம் பித்துக் கொண்டுழல்வதேன், எப்பித்தென்னிலோ? உயர்ந்த ஜாதியார், தாழ்ந்த ஜாதியார், வறுமையில் மிருந்தார், பெருமையிற் செழித்தார், சுற்றத்தார் சுற்றமல்லாத வேறு பக்கத்தார், இக்குற்றர். இக்கற்றர் சிறியார் பெரி (உருவத்தால்) யார் என்றும் அலகுமிதம் அற்ற வித்தியாசங்கள் பந்திபத்தியாகப் பாவி யிருக்கின்றனவன்றே? அப்பித்தென்னென் போம்.

கம்பிந்தியா முதலிய விடங்களில் நம்மிடத்தினின்று அங்கப்பாடும் வித்தியாசம் தாழ்வடைந் தொழிந்து பரித்துப் போகவில்லையே! எவ்வளவோ சீர்திருத்த மேதாவிகள் பற்பல மேடை மீதேறி கோடையிடி போல அதிர் ஒலி பிறக்கக் கதறியமிருக்கின்றார்களே, ஒரு எட்டுணையும் விட்டொழிந்த பாடில்லையே.

சூட்சிக்காரர்கள் மேற்பூச்சுக்கேனும் ஜாதிபேதம் நீதியாகாது என்று ஓதி, ஓதி அறிவிலிகளாய்' உள்ள பெரும்பாலார் நம்புப்படிக்குச் சொல்லி ஏமாற்றுகின்றார்கள். அருகில் நெருங்கி அந்தஉண்மையை ஆராயின் அத்தனையும் சூட்சியென அறியக்கிடக்கும்! அக்கம் பக்கத் (அண்டை அயல்)தில் பார்த்தால் வர்ணாச்ரமதர்ம கான்பர (சபை) ன்ஸ் வெகு ஆடம்பரத்துடன் நடைபெறக் காணலாம். இந்தப் போலிஉபதேசிகளின் உபதேசத்தைப்பாமரர்கள்நம்பிப் பெருமோசம் போகின்றார்கள். அவர்கள் செய்வதும் சூது, சிந்திப்பதும் சூட்சியெண்ணம் என்றுஇன்று மறியாத ஏழை (அறிவிலார்)கள் கணக்கையெழுத வியலாது. என்செய்வது. கற்றுணர்ந்தவர்களும் அவர்கள் மாய வலையிலகப்பட்டு நியாயந் தவறி நடக்கின்றார்கள்.

ஹே உலகமே! நீ இன்னும் உண்மையை அறிந்தய்யாது செம்மையில் வழியில் சேர்கின்றனையே என் செய்வது. காலத்தின் கோலத்தைக் கருதி இரக்கமுற வேண்டியிருக்கின்றது. 'யதார்த்தவாதி வெகுஜன விரோதி'' என்ற பழமொழியை நினைவுக்குக் கொண்டுவர வேண்டியிருக்கின்றது. கண்ணொளி வேண்டாமென்பார் காசினியி லின்று. வீண்மனப் புண் வேண்டாமென்பதுதான் மனமார்ந்த உண்மைக்கருத்து. பந்தியில் போசனநியில் யாவராய் இருப்பினும் குந்தி (அதாவது உட்கார்ந்து) உணவாநியருந்து வதில் குறையாது வந்தற்றதோ? அறிந்திலேம். ஒருவர் உண்ணும் உணவைப் பக்கத்திருப்போர் பாய்ந் தப்பிக் கொள்வரோ? அல்லது பந்திக்கு முந்துவது சோர்ந்திருப் போதாது போய் விடுமே யென்றஞ்சியோ? அல்லது அழுக்காறு கொண்டோ? அதுவுமல்லாது பணப் பெருக்கை யுன்னி யொதுக்கப் படுகிறதோ? வாசகர்களே தாங்களே உற்று உணருங்கள்.

பசிக்குணவருந்துவதிலும் பாரபட்சம் பாராட்டலாமோ? அங்ஙனமாயின் தேசம் சீர்கெட்ட நிலைமையினின்று விடுதலையடைதற்கு யார் கஷ்டப்பட்டென்னுகும். பேசிப் பேசிக்காலம் கழியுமின்றி நேசித்தின்பம் அடைதல் மகா கஷ்டம் என்பது திண்ணம். பண்டைப் பழக்க வழக்கத்தை யின்றே யொழித்து நன்றே யடைய உலகம் முன்னுக்குவர வேண்டும். ஆனால் பார்வைக்கு அவலட்சணமா (சுத்தமின்றி)யும் வியாதியால் பீடிக்கப்பட்டும், சுத்தமான உடையில்லாமலும் உயர்ந்த ஜாதியென்று வாய்ப்பறை யடித்து நம்மை நம்பும்படிக்குச் சூட்சி செய்த மாயில்! உதித்தவனை விருப்பினும், அன்னவனை அல்லது அன்னவரை ஒருபுறம் ஒதுக்கி வைக்க வேண்டியது சர்வ சம்மதம்.

அப்படிக்கின்றியும், ஒரு குலத்தில் உதித்தவரையும் ஒருவு முறைப்பாத்தியம் உடையவர்களையும் கம்பிந்தியாவில் ஒதுக்கி வைப்பவர்களுடைய மௌட்டீகத் தன்மையை என்னென்று வரைவது.

இத்தகைய கொள்கை கொண்ட பெருந்தனக்காரர்களிலும் சிலர் தேசோபகாரியாக அறிவிக்காமல் தேர்ந்தெடுக்கப்பட்டு பற்பல சபையேறி நிற்பாலையாம் எமக்கு அநுகூலமில் இடம் போதாமற் தங்குகின்றோம். இவர்களா தேசத்தொண்டர்கள்? இவர்களா தேசநன்மைக்குரியார்? தாங்கள் கௌரவம் விரும்பிப் போலித்தனம் செய்கின்றார்கள், என்பதை ஆழ்ந்தறிவார்க்கு வெள்ளிடை மலை. சுற்றத்தார் தன் இல்லத்திற்கு வரின் தனக்கோர் இடமும் விருந்தினர்க்கொரு இடமும் தேடுகின்றதே இந்தியாவின் தென்பாகத்தோர் வழக்கம். இதை யறிந்தவர்களுமில்லையோ? இது மக்கட்பிறப்பிற்குத், தக்கவழக்காமோ? சுற்றத்தாரோ தூரத்தில் நின்றால் மற்றென்ன கேட்கவேண்டும்? சுத்தமுடையவன் எத்தகைய பந்தியிலும் ஒருங்கிருந்து உண்ணலாம் என்னும் சட்டம் நம் இந்தியர்கட்குள் வந்தெய்தல் வேண்டும்: ஆசார சீர்திருத்த சபை பேசாதிருக்கலாகாது. அது கண்விழித்துக் காசினியில் பரபரப்பாக வேலைசெய்ய வேண்டும். எத்தனையோ சிக்கல்களைக் களையாது மறியல் தொழிலைத் தொண்டர்கள் புரிவது ஆன்றோர்க்கு அருவருப்பாகும். செய்வன செய்யின் தெய்வமே துணைநின்று உய்யும் வழியளிக்கும். போகா வழியிற் புக்கிமனம் வேகாதிருக்க வேண்டும். ஒற்றுமை வேண்டு மென்பார் ஒருபுறம் சங்கீதம் பாடுகின்றார்.

தீண்டாமை வேண்டாம் என்று ஒரு சாரார் தாண்டவம் புரிகின்றார். மற்றொரு சாரார் இதற்குச் சார்பினர் போலப் போலித்தாளம் போடுகின்றார். இவைகளெல்லாம் உண்மையில் நிலவும் காலமும் போஜனக் கண் திஷ்டியும், அழுக்காற்றலாய் அருவருப்பும், அம்புவியில் அறவே நீங்கவேண்டும். அனவரதமும் தலைவர்கள் நினைவிலிருத்திப் பிரசாரவேலையில் பிரவேசிக்க வேண்டும். உண்பதில் ஒற்றுமையுண்டாக வேண்டியது ஒரு முக்கியமான கடமை. சமீபத்தில் கின்னான் சுப்பிரமணியர் ஆலயத்தில் கார்த்தி (கிருத்திகை) கை நட்சத்திரத் தன்று தனவைசிய சிரோரத்தினங்கள் ஏழைகட்கு அன்னமளித்ததாகவும் இதுகாறும் உட்சாப்பாடு வெளிச்சாப்பாடு, இந்த உட்சாப்பாட்டிலும் வித்தியாசம் இருந்ததாகவும் மேற்போந்த தினத்தில் அவ்வித பிரிவினையற்று சமபந்தி போஜனம் நடந்ததாகவும் ஓர் நிருபர் தமிழகத்தில் வரைந்திருந்ததைக் கண்டோம்களி மிகக் கொண்டோம். ஆனால் கீழ்மக்கட் பிரிவினை மட்டும் இருப்பதாகவும் அக்குறையும் நீங்கவேண்டு மென்னும் பொருள்பட எழுதியுமிருந்ததைப் பார்த்தோம். தக்கார் முயலின் இக்காரியமும் எளிதில் முடியுமென்பது உண்மை.

## அறிவிப்பு.

யாம் இலங்கையில்-சுற்றுப்பிரயாணம் செய்துகொண்டிருப்பதில்எம்மாலியன்ற முயற்சியுடன் ஒவ்வொரு நாட்டுப் பகுதிகளுக்கும் சென்றே வருகிறோமாயினும் சில உள்நாடுகளுக்குப் போக முடியவில்லை. அப்பகுதி அபிமானிகளும் எமது வரவை ஆவலுடன் எதிர் பார்ப்பதாயறிந்து சந்தோஷிக்கின்றோம். யாம் வரமுடியாத பகுதியிலுள்ள அபிமானிகள் நமது மித்திரன் பாதுகாப்பு நிதிக்கு அவரவராலியன்றளவு மனப் பூர்வமாய்க் கொடுக்க விரும்புகிற தொகைகளை கொழும்பு 26-நிர் காரீஸ் ரோட், எமது நண்பர் கே. கலியாணசுந்தர நாடாரவர்கள் பெயருக்கு போஸ்டல்ஆர்டர், மணியார்டர் அல்லது நேரில்செலுத்தி ரசிதுபெற்றுக் கொள்ளலா மென்பதை இத்தால் அறிவித்துக்கொள்ளுகின்றேன் வந்தனம்.

க்ஷத்திரியமித்திரன் பத்திராதிபர்

(முகாம்) இலங்கை.

## ஆலயத்திற்கும் பொதுஜனங்களுக்கு முள்ள சம்பந்தம்.

கொட்டாரக்கரை ஸ்ரீலஸ்ரீ சதாநந்த சுவாமிகளால் பிரகரிக்கப்பெறும் அகஸ்தியன் என்னும் பத்திரிகையில் பின்வரும் விஷயம் காணப்படுகிறது:—

நமது ஹிந்துமத சாஸ்திரங்களைக் கவனிக்கும்பொழுது அக்கினியில் தெய்வத்தை ஆராதிக்கின்ற அந்தணர்க்கும் தமது ஹிருதயத்தில் தெய்வத்தை வழிபடுகின்ற முனிவர்களுக்கும், எல்லா ஜீவராசிகளிலும் தனது உள்ளத்திலும் தெய்வத்தைப் பாவித்து வழிபடுவோராகிய சமரச ஞானிகளுக்கும் 'தேவாலயப் பிரவேச விக்கிரகாராதனை முறைகள்'' ஒதுக்கிவைக்கப்பட்டிருப்பதாகக் காணப்படுகிறது. (இதனைப்பற்றி மேலே விவரிப்போம்.)

ஆனால் மேற்கூறிய மூவகைக்கூட்டத்தினரைத் தவிர்த்து மற்றுள்ள பூலோகவாசிகள் யாவரும் ஆலயப்பிரவேச விக்கிரகாராதனைகளில் நெருங்கியசம்பந்தமும் பாத்தியமு முடையவர்களாகத்தெரிகின்றது.

எதனாலெனின், இவர்களின் மனம் வேதங்களிற் சொல்லப்பட்ட மந்திரம் யோகம், ஞானம் முதலிய கிரியை விசேஷங்களால் ஸம்ஸ்காரம் செய்யப்பெறாமலும், சூக்ஷ்ம வடிவம்பெற்று ஒரு முகப்படாமலும் மிக ஸ்தூலமாயும் சகாகாலமும் சஞ்சலப்பட்டும் இருந்துகொண்டிருப்பதால் இவ்விதமனப்பக்குவமுடைய ஜனங்கள் தாம் 3-வது முறையிற்கூறிய விக்கிரகாராதனத்திற்கும் ஆலயப்பிரவேசத்திற்கும் பிறவியிலேயே பாத்தியமுடையவர்களாகின்றனர். இவ்விதம் பிறவியிலேயே (ஜன்ம) பாத்தியம் பெற்றவர்களாகிய பற்பல கோடிக் கணக்கான ஜனங்களே (தாழ்ந்த ஜாதியினர் என்று ஒதுக்கப்பட்டு) தற்காலம் தேவாலயங்களிற் பிரவேசிக்கக் கூடாதென்றும் அங்குள்ள விக்கிரகங்களை நேரே அர்ச்சித்து வழிபடக்கூடாதென்றும், தடுக்கப்பட்டு வருகின்றனர். இதன் நியாயங்களை நாம் சீர்தூக்கிப் பார்க்கவேண்டும்.

### பொது ஜனங்களுக்கு ஆலயத்தினின்றும் கிடைக்கவேண்டிய பிரயோஜனம்,

ஹிந்துமத சாஸ்திரப்படி அக்கினியிலும் ஹிருதயத்திலும் எங்கும் ஈசனை வழிபடுவோராகிய 1, 2, வது மனப்பக்குவமுடையோர் அந்தந்த வல்லைகளிலேயே நின்றுவிடவேண்டும். மூன்றாவது வகுப்பில் விளங்குகின்ற சாதாரண ஜனங்கள்யாவரும் தேவாலயங்களில் பிரவேசித்து அவரவர் அன்புக்கேற்ப விக்கிரகாராதனை செய்து, சிறிதும் பேதபுத்தியின்றி வழிபடவேண்டும். இதுதான் தேவாலய பிரவேசத்திற்குரிய பாத்யமும் நியாயமார்க்கமுமாகும். இந்த நியாயத்தை புறக்கணித்துத் தற்காலம் ஹிந்துமதத்திலுட்பட்ட பலவகுப்பாரும் தேவாலயங்களிற் பிரவேசிக்கக் கூடாதெனத் தடுக்கப்பட்டிருப்பது நியாய விரோதமாவதோடு, அவ்விதம் தடுப்போர் ஹிந்துமதசாஸ்திரஞான சூனியர்களாயும் குரூர புத்தியுடையவர்களாயும் தாமும் நன்மை பெறாமல் பிறரும் நன்மை பெறாமல் வீண்வாதம் செய்யும் அவிவேகிகளென்றும் தமது செய்கையால் பெயரிட்டுக் கொள்பவராயுமாகின்றனர். இவ்விதம் பிறவியிலேயே விக்கிரகாராதனை செய்வதற்குரிய மனப்பக்குவமும் பாத்தியமும் பெற்றிருக்கின்ற ஜனங்களை அவ்விதம் செய்யக்கூடாதெனத் தடுப்பதற்கு எவர்க்கும் ஹிந்துமத சாஸ்திரப்படியாவது பொருளாதார சாஸ்திரப்படியாவது யாதொருபாத்தியமும் பிறப்புரிமையையும் கிடையாது. இவ்விதம் பாத்தியமில்லாதவிஷயங்களில் தலையிட்டு விவகாரம்செய்கின்ற ஜனங்கள் பொதுஜனக்ஷேமத்தையும், பூலோகநன்மை யபிவிருத்திகளையும் முற்றிலும் தடுத்த குற்றத்திற்காளாகின்றனர்.

மேல் வகுப்பினர் என்று கருதுவோர் இங்கு தெரிந்துகொள்ளவேண்டிய உண்மைகள் பல கிறிஸ்தவர்களெல்லாம் கிறிஸ்துவேதமாகிய பைபிளைப் படிப்பதற்கு ஒரேவிதமான சுதந்திரமுண்டு. மகமதியர்க்கெல்லாம் மகமதிய வேதமாகிய குரான் படிப்பதற்கு ஒரேவிதமான பாத்தியமுண்டு, அவ்வாறே புத்தர்களுக்கும் உண்டு. நமது ஹிந்துக்களுக்கோ வென்றால் அவர்களைப்போல்வேதங்களையும்ஆகமங்களையும்படிப்பதற்குஎல்லோருக்கும் ஒரேவிதமான சுதந்திரங்கொடுக்கப் படவில்லை. முற்கூறிய மூன்றுமதத்தினர்க்கும் அவரது வேதங்களை படித்தே தீரவேண்டும். என்றநிர்ப்பந்தமு முண்டு. நமது ஹிந்துக்களிலோ அவர்களுக்கு அவேதங்களைப் படித்தேதீரவேண்டும் என்றநிர்ப்பந்தமிருப்பதுபோலஹிந்துக்களுக்குள்ளே யுள்ள எல்லோரும் வேதாகமங்களைப் படிக்கவைக்கக்கூடாதுஎன்ற நிர்ப்பந்தமுண்டு. மேற்படி மூன்று மதத்திய வேதங்களையும் பூலோகத்திலுள்ள மனிதர்யாவரும் படிப்பதற்கு அந்தந்த மதத்தினரால் பாத்தியம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. நமது ஹிந்து மதத்திலோ நமது மதத்திலுட்பட்டவர்களும் படிக்கக் கூடாதென்றுநிர்ப்பந்தத்தில்சிலர்க்குப்பூரண சுதந்திரம் கொடுக்கப்பட்டிருக்கின்றது. மற்ற மதத்தினரின் நிர்ப்பந்தம் முறையே அவர்க்கும் உலகத்திற்கும் நன்மை யளிக்கின்றது. நமது மதத்தினரின் நிர்ப்பந்தமோ, நமக்கும் உலகத்திற்கும் தீமையைக் கொடுக்கின்றது.

## திருவிதாங்கூர், வாலிப நாடார் சங்கத்தின் முதலாவதாண்டு நிறைவு விழா.

12-5-23-யில் மாலை 4-மணிக்கு நாகர்கோவில்கிறிஸ்தியன்காலேஜுக்கு அடுத்த ரக்ஷண்ணிய சேனையின் மத்தியமண்டபத்தில் அமைத்திருந்த கொட்டகையின் கண் திருவனந்தபுரம்ஹைகோர்ட் வக்கீல் ஸ்ரீமான் வச்லங்ரேஸ் நாடார் எம். எ. பி. எல். அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் ஏராளமான நாடார் கனவான்கள் குழுமியிருக்க விழா ஆரம்பமானது. கடவுள் வாழ்த்துப் பாடப்பெற்றதும், தலைவரவர்களின் முன்னுரைக்குப்பின் காரியதரிசியால் வருஷாந்த அறிக்கைப் பத்திரம் வாசிக்கப்பட்டது. கல்வியென்னும் விஷயமாக சனம் கிருஷ்ணப் பெருமாள் நாடார் அவர்கள் கிராமங்கள் தோறும் கல்விச்சாலைகளேற்படுத்தி கட்டாயக் கல்வியாகச்சொல்லி வைக்கவேணுமென்றும் ஏழைகளாயுள்ளவர்களுக்கு போர்டின் ஏற்படுத்தியும் குலதர்மத்தை, துண்டுப்பிரசுரங்கள் மூலம் வெளிப்படுத்தியும் 'சௌன்ஸில்களேற்படுத்தி ரிஜிஸ்தர் செய்ய வேணு மென்றும் அது வகைக்கு எல்லோரும் பொருளுதவி செய்யவேண்டு மென்றும், அத்தாட்சியாக சென்னை மாகாண நாடார்களை பார்த்துக் கொள்வது நலமென்றும் தொழில் கல்வி சாஸ்திரக் கல்வி சரீரசாஸ்திரம் முதலியவைகளை நமது மாணவர்களுக்கு முக்கியமாகக் கற்றுக் கொடுக்க வேண்டு மென்றும் தற்சமயம் படித்துஇருப்பவர்களில் தென்திருவிதாங்கூர் இந்து நாடார்களில் இரண்டு லட்சத்துசெல்வானம் பேரில் ஆண்களில் நூற்றுக்கு ஒன்பதரைப் பேரும் பெண்களில் நூற்றுக்கு இரண்டு பேரு மாத்திரம் படித்திருக்கிறார்க ளென்று எடுத்துக்காட்டிப் பேசினார்கள். நமது மதமென்னும் விஷயத்தை தக்ஷண தீபம் பத்திராதிபர் ஸ்ரீமான் எஸ். எஸ். சுகுலம் நாடார் அவர்கள் உபந்நியாசஞ் செய்தனர். நமதுமதமென்பது இந்தியதேசத்தில் ஆரியர்கள் வருவதற்குமுன் நிறைந்திருந்த திராவிடர்களே. நாடார்களெனப் படுவர் இவர்கள் அரசராகவிருந்து அரசாட்சி புரிந்தவர்கள் அந்தக்ஷத்திரியகுலத்துதித்தசந்ததியார்களே நாம், ஆயிரம்வருஷங்களுக்குமுன் கல்வி கேள்விகளில் சீரும் சிறப்பும் பொருந்தி வாழ்ந்திருந்தோம். ஆரியர்கள் வந்தபின் சீர்கேடடைந்துவிட்டோம் அத் திராவிடர்களுடைய மதம் திராவிடமதமென்று வழங்கிவந்ததென்றும் இன்னுமனேகமாக நீண்டதோர் உபந்நியாசம் செய்தனர். விவாதகஷ்டமென்னும்.விஷயத்தை நாகர்கோவில் காலேஜ் தமிழ் பண்டிதர் ஞானபரணம் நாடார்அவர்கள் சவிஸ்தாரமாகப்பேசிமுடித்தனர். இடை யிடையே சங்கீதம் முழங்கிக்கொண்டிருந்தன. தலைவர்அவர்களின் பின்னுரைப் பிரசங்கத்தின் ஒவ்வொரு மொழிகளும் விலைமதிக்கத்தக்கதாயிருந்தது. கனம் நாராயணப்பெருமாள் நாடார் அவர்களால் தலைவரவர்களுக்கும் மற்றுமுள்ளோர்களுக்கும் வந்தனோபசாரஞ் சொல்லபாலைசூட்டப்பெற்றுசபை இனிது நிறைவேறியது.

L. S. லெட்சுமணபிள்ளை,

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

# ஐரோப்பிய வர்த்தமானம்.

## ஜெர்மனி.

மகாயுத்தத்தின் பயனாக ஏற்பட்ட சமாதான உடன்படிக்கையின்படி ஏற்பட்ட நிபந்தனையின்படி ஜெர்மனி தவணைப்படி செலுத்தாததினால் அதன் முக்கிய பிரதேசமாகிய ரூர் பிரதேசத்தை பிரான்சும் பெல்ஜியமும் பிடித்துக் கொண்டது. ஆனால் ஜெர்மனி எதிர்த்து சண்டை செய்யாமல், வேலைநிறுத்தம் செய்தும் சாத்வீகமாய் எதிரிகளுக்குக் கீழ்ப்படியாமலுமிருந்து கொண்டு சாத்வீகப் போராடினார்கள்.

மிருக பலத்தையும், [illegible] த்தையும் பக்கபலமாய்க் கொண்டு, உலகத்தையே தலைகீழாய் புரட்டிவிட நினைத்து, மகா யுத்தத்தில் வலியச்சண்டைக்கு கைகொடுத்த ஜெர்மனி யுத்தத்திற்குப் பிற்பாடு சாத்வீகமாக போராட முன் வந்ததைக் கண்ட உலகத்தார் ஆச்சரியப்பட நேர்ந்தது. இப்படிப்பட்ட சமயங்களில் ஜெர்மனியின் பிரதம மந்திரி மிஸ்டர் குனோ, அடிக்கடி உலகத்தோருக்கும், நேசதேசங்களுக்கும் எச்சரிக்கை செய்து கொண்டு வந்தார். இவ்விதமான எச்சரிக்கைகளைக் கண்டு அறட்டு மிறட்டு உருட்டுச் செய்கிறதென்று எண்ணாமல் ஜெர்மனி ஏதோ மற்றொரு பெரிய யுத்தத்திற்குத்தான் தயார் செய்து கொண்டு சாத்வீகப் போராடுவதுபோல் பாச்சல் போடுகிறது என்று நினைத்தார்கள். ஆனால் பொதுவாக ஐரோப்பிய தேசங்களுக்கு இனிச்சண்டை செய்யச் சக்தி எங்கே யிருக்கிறது? சண்டை செய்வதற்கு ஆவலும் அகங்காரமும் அறட்டும் மிறட்டும் மிகவும் அதிகமாய்த்தானிருக்கிறது. அவைகள் இருந்து என்ன செய்ய? சண்டை செய்ய சக்தி வேண்டாமா? சண்டை செய்ய சக்தியில்லாமல் சாத்வீகப் போர் தொடங்கித்தான் என்னசெய்ய முடியும்? இந்நிலைமையில் ஜெர்மனியிருக்கிறதென்பது இப்போதுதான் விளங்குகிறது. நஷ்ட ஈடு செலுத்துவதில் பல மாறி [illegible] [illegible] கொண்டிருக்கிறது.

## பிரான்சு.

மகா யுத்தத்தின் போது நேசதேசங்களில் முன்னணியில் முனைந்து நின்று சண்டை செய்தது பிரான்சுதான். ஜெர்மனியர்களின் அட்டூழியங்களுக்கும், நாச செய்கைகளுக்கும் உட்பட நேர்ந்தது பிரான்சுதான். ஏராளமான ஜனச்சேதம் ஏற்பட்டதும் பிரான்சுக்குத்தான். பொதுவாக சண்டைசெய்யவந்தால் இதெல்லாம் வராமல் போகுமா? இதைக்கொண்டு, நாசமுறைகளை கையாட விரும்புவது அழகல்ல வென்பதுதான் உலக ஆக்ஷேபனை. மகாயுத்தத்தின்போது தனக்கு ஏற்பட்ட முழு நஷ்டத்தையும் ஏககாலத்தில் வாங்கிவிட வேண்டுமென்று ஜெர்மனிக்குச் சொந்தமான ரூர் பிரதேசத்தை கைப்பற்றிக் கொண்டு, இரண்டுங் கெட்டான் நிலைமையில் நிற்கிறது.

## பெல்ஜியம்.

மகா யுத்தத்தில் ஜெர்மனியர்கள் முதலில் பெல்ஜியத்தைத்தான் தாக்கினார்கள். மூன்று மாதகாலமாய் பெல்ஜியத்தில் பலத்த சண்டை நடந்தது; பெல்ஜியத்திலுள்ள ஆண்ட்வெர்ப் கோட்டையானது உலகத்திலேயே முதன்மையானது அதை உலகத்தையே நடுங்கச்செய்த நெப்போலிய சக்கிரவர்த்தி ஒரு காலத்தில் பிடிக்க முடியாமல் இந்தக் கோட்டையைப் பிடித்தவர்கள் உலகத்தையே ஜெயிக்கவல்லவராவார்கள் என்று சொல்லியிருக்கிறார். அப்படிப்பட்ட கோட்டையானது ஜெர்மனி பீரங்கிகளால் 36-மணிநேரத்திற்குள் தவிடுபொடியாகப் போய்விட்டது. பொதுவாக பெல்ஜிய ராஜ்யமே உருமாறிப்போய் விட்டது. ஜெர்மனிக்கு விரோதமாய் பிரான்சின் அடிச் சுவடுகளை பின்பற்றி நிற்கிறது. எவ்வளவு நஷ்ட ஈடு வாங்கினாலும் பழைய பெல்ஜியமாகுமோ!

## இட்டாலி.

இட்டாலி தேசத்தில் தலைநகர் ரோமாபுரி இது ஒரு புராதனமானதும் மிகவும் கீர்த்தி பெற்றதுமான பட்டணம். ரோமர்கள் ஓர்காலத்தில் ஐரோப்பாவையே ஜெயித்து இராஜ்ஜியபாரம் நடத்திவந்தார்கள். தாழ்வு ஒரு காலம் வாழ்வு ஒரு காலம் என்றபடி இப்போது ஐரோப்பா தேசத்தில் ஒருபகுதியினராயிருக்கிறார்கள். இட்டாலி பொதுவாக என்னமோ சண்டைசெய்தோம் இனி சும்மாயிருக்க வேண்டுமென்றுதான் நினைக்கிறது. ஆனால் பி[illegible] [illegible] என்று ஒரு போலிக்காரனைக் [illegible] பாராளுமன்ற [illegible] வருத்தப்படுகிறது, பொதுவாகப் பார்த்தால் இட்டாலி தேசம் இனி ஒன்றுக்கும் லாயக்கற்ற நிலைமையிலிருப்பது போல தெரிகிறது.

## பிரிட்டன்

தற்கால ஐரோப்பிய தேசவர்த்தமானங்களைக் கவனித்தால் பிரிட்டன் நடுநிலைமை வகித்திருக்கிறதென்றுதான் சொல்ல வேண்டியதிருக்கிறது. பிரான்சு நாசநிலைமையில் ஜெர்மனியை நசுக்கிறது என்று பிரான்சை கண்டித்தால், பிரான்சின் புதுசிநேகம் போய்விடுமோ என்ற பயம் ஒருபக்கம். ஜெர்மனியின் முக்கிய ரூர் பிரதேசத்தை பிரான்சு பிடித்துக் கொண்டால் ஐரோப்பாவின் கைத்தொழில் முறைகளை ஒருவாறு பாதிக்கப்படும். மேலும் ஜெர்மனி போருளாதார நிலைதன்னில் நஷ்ட ஈடு தவணைப்படி செலுத்த சக்தியில்லை என்ற உண்மையறிந்து அதற்கு விரோதமாய் ஒன்றைச் செய்யவோ சொல்லவோ பயப்படுகிறது. இந்நிலைமையில் தற்சமயம் ஜெர்மனிக்கும் பிரான்சுக்கும் நடந்து வரும் சாத்வீகப் போராட்டத்தை கவனித்துக் கொண்டு அந்தப்பக்கம் சிறிதுநேரம் இந்தப்பக்கம் சிறிதுநேரமாகவும் அப்படியும் இப்படியுமாகவும் கண்டித்தும் கண்டிக்காமலும் காலத்தை கடத்திக் கொண்டு வருகிறது.

## துருக்கியும், கிரீஸும்:

மகாயுத்தத்திற்குப் பிறகு துருக்கியர்களும் கிரேக்கர்களும் சண்டை செய்து, ஓய்ந்துபோனார்கள். நேசதேசங்கள் மத்தியஸ்தர்களாக இருந்து சமாதானம் செய்து பார்த்தும் சமாதானம் நிலவுவதற்கு மார்க்கமில்லை. மறுபடியும் இரண்டாவது முறை சமாதான மகாநாடு லாசனில் கூடியிருக்கிறது இங்கு ருஷிய பிரதிநிதி கொல்லப்பட்டார். கொலைக்குக் காரணம் தெரிய பெறவில்லை சமாதானமும் இப்படியும் அப்படியுமாகத் தானிருக்கிறது சமாதானம் செய்கிற இடத்தில் சண்டைக்குக் காரணமான பேச்சுகள்தான் நடைபெறுகிறது. ஒவ்வொரு தேசப் பிரதிநிதிகளும் மாறியும் மாறியும், புதிய புதிய திட்டங்களை தயாரிக்கிறார்கள். ஒன்றுக்கு ஒன்று முரண்பட்ட முறையில் திட்டங்களை மாற்றி மாற்றி வெளியிடுகிறார்கள். சகிப்புத்தன்மையும் விட்டுக் கொடுக்கும் சுபாபமுமில்லாமல் மகாநாடு ஒருவாறு நடைபெற்றுக்கொண்டு வருகிறது.

## ஓர் வேண்டுகோள்.

திருநெல்வேலி ஜில்லாவிற்கே ஓர் முக்கிய நகரமாயும் மத்தியமுமான ஆழ்வார் திருநகரில் நாடார்களுக்கு சாப்பாடு கிளப் நாடார் பேட்டை முதலியன இல்லாமல் இருந்தது, நாடார்களுக்கே ஓர் பெருங்குறையென்று கண்டு, 30-5-22 தற்சமயம் ஆழ்வார் திருநகரிலுள்ளநாடார் வர்த்தகர்களும் உத்தியோகம் வகித்தவர்களும் [illegible] சுற்றியிருக்கிற நாடார்கனவான்களும் ஒரு சபைகூடி அவைகளை ஸ்தாபிக்கும்படி தீர்மானங்கள் செய்தனர். அதன்படி திருச்செந்தூர்ரோட்டிற்கு தென்புறமாகவும் பலசரக்கு கடைகளுக்கு வடக்காகவும் உள்ள முதலியாருக்கு சொந்தமான ஓர் கிட்டங்கு 3-வருஷங்களுக்கு வாடகையாக வாங்கி டை. நிலத்தில் ஓர் கிளப்பும் ஸ்தாபிக்கப்பட்டுநடந்து வருகிறது. மகமையும் வண்டிக்கு 1அணா, மாட்டுக்கு 6பைசா, சுமைக்கு 3பைசாவாகவும் வசூலிக்கப்பட்டுவருகின்றது. சொற்ப நாடார்களுள்ள இவ்வூரில் ஒற்றுமையில்லாமலிருப்பது மிகவும் விசனிக்கத் தக்கது. அநேக நாடார் கனவான்கள் தங்கள் மகமையை ஒழுங்காய்செலுத்தாமலும் புதியபேட்டை கட்ட முயற்சிசெய்யாமலும், மாதமொருமுறை சங்கக்கூட்டம் கூடாமலும் இருக்கும் பெருங்குறைகளை ஆழ்வார் திருநகரியை சுற்றியிலும் இருக்கப்பட்ட நாடார் கனவான்கள் கவனித்து ஒழுங்காய் நடைபெற முயற்சி செய்யக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

பெ. பொன்னையா நாடார்.

### நமது ஏஜெண்டின்
## சுற்றுப் பிரயாணம்.

நமது மித்திரன் சுற்றுப்பிரயாண ஏஜெண்ட் [illegible] 1-5-23ல் [illegible] சென்று [illegible] 19-5-23 ஒரு [illegible] [illegible] கூட்டம் நடைபெற்றது. [illegible] 5.0 [illegible] [illegible] கனம் [illegible] சேதுராஸ் நாடாரவர்கள் நமது [illegible] மகாஜன சங்கம் நோக்கங்களைப்பற்றியும் சமுதாயக் விஷயமாயும் நமது [illegible] முற்போக்கான விஷயமாயும் பேசினார்கள் என்று ஸ்ரீமான் உ. ப. மீ. சவரிமுத்து நாடார் எழுதுகிறார்.

* * *

'நமது மித்திரன்' ஏஜெண்ட் கனம் எஸ். சேதுராஸ் நாடாரவர்கள் 18-5-23 யில் ஆலந்தலை வந்து சேர்ந்தார்கள். 18, 19, 20-5-23 முறையே ஆலந்தலை, புதூர், கன்னைநல்லூர், ஆகிய மூன்று கிராமங்களிலும் திரளான நம் இனத்தார் மத்தியில் இரவு 9-மணிமுதல் 12 மணி வரையிலும் நாடார் மகாஜன சங்க நோக்கங்களையும் பத்திரிகைகளின் லட்சியங்களைப்பற்றியும் வெகு விரிவாக எடுத்துரைத்துப் பேசலானார்கள்- என்று ஸ்ரீமான் ப. ம. செபஸ்தியான் நாடார் எழுதுகிறார்.

* * *

நமது மித்திரன் ஏஜெண்ட் கனம் எஸ். சேதுராஸ் நாடாரவர்கள் 11-5-23ல் வடக்கன்குளம் விட்டு பர்ப்பசேரியில் நடைபெறவிருந்த பொதுக்கூட்டத்திற்கு சென்று 12-5-23 இரவு அவ்விடம்விட்டு பணகுடிவந்து 13-5-23 கலந்தபனை சென்று இரவு டை யூர் 'க்ஷத்திரிய நாடார் சங்க'' பிரஸிடெண்ட் ஸ்ரீமான் ஞானமணி நாடாரவர்கள் தலைமையின் கீழ் [illegible] உபந்நியாசம் புரிந்து கோரியூர் சென்று செம்புலிங்க நாடார் [illegible] [illegible] நாடாரவர்களை போலீஸ் கீழ் உத்தியோகஸ்தர்கள் பொய்க்கேஸ் மூலமாய் தன்புறுத்திவரும் கொடுமையை விசாரித்தவிட்டு 14-5-23 பகல் 11மணிக்கு [illegible] சேர்ந்தார்கள். 14-5-23—15-5-23 இவ்விரு தினங்களிலும் "அர்ச். சூசையப்பர் நாடார் மகாஜன சங்க'' ஆதரவில் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கல்வி விஷயமாயும் குலவிஷயமாயும் உபந்நியாசங்கள் நடைபெற்றன. நமது மித்திரனுக்கு அபிமானிகள் சிலர் சந்தாதாரானார்கள் என்று ஸ்ரீமான் வி. எஸ். சிங்காரய்யர் எழுதுகிறார்.

## 9-வது மகாநாடு.

நாடார் மகாஜன சங்கம் 9-வது மகாநாட்டை திருநெல்வேலியில் நடைபெறுவதற்குரிய ஏற்பாடு செய்யவேண்டிய விஷயமாய் கவுன்ஸில் மீட்டிங்கின் தீர்மானப்படி 19-5-23 ல் ஸ்ரீமான்களான மா. வே. பழனிச்சாமி நாடார், வா. அ. புன்னையப்ப நாடார், மு. ச. பெ. செந்திக்குமார நாடார், பெ. சி. சிதம்பர நாடார் வி. அ. விஸ்வ நாடார், சு. மு. அ. வடிவேல்முருக நாடார், க. சு. அருணகிரி நாடார், மு. வீ. முத்தையா நாடார் முதலிய அபிமானிகள் திருநெல்வேலி சென்று, அவ்விடத்திலுள்ள ஸ்ரீமான்கள் அ. ரி. அ. செண்பக நாடார், சங்கரலிங்க நாடார். முருக நாடார் முதலியவர்களைக் கலந்து யோசித்து 20-5-23 ல் ஆறுமுகநேரி சென்று, டை யூர் ஸ்ரீமான் எஸ். பொன்னையநாடாரவர்களையும், ஸ்ரீமான் அ. ரி. அ. செண்பக நாடாரவர்களையும் டை மகாநாட்டை நடத்திவைக்கவேண்டுமென்று கமிட்டியார் கேட்டுக்கொண்டதற்கிணங்கி, மகாநாட்டை குறிப்பிட்ட காலத்திற்குள் திருநெல்வேலியில் நடத்தி வைக்கின்றதாகவும். டை மகாநாட்டை நடத்திவைக்கவேண்டிய சகல விஷயங்களுக்கும் நாளது 26-க்குள் தெறிவித்துக்கொள்வதாகவும்வாக்குறுதிகொடுத்தது மிகவும் பாராட்டத்தக்கதேயாயினும், இரு கனவான்களும் கூடியசீக்கிரம் மகாநாட்டை [illegible] [illegible] முடியுமுன் ஆரம்பித்து [illegible] நடத்துவார்களென்று எதிர்பார்க்கப்படுகின்றது.

மு. வீ. முத்தைய நாடார்.

# வாரத்திரட்டு

—(*)—

சென்னை மகாஜன சபையின் வருஷாந்தக் கூட்டம் 20-5-23 மாலை சபாமண்டபத்தில் ஸ்ரீமான் வி. கோபாலசாமி அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. அவ்வாயம் புதிய உத்தியோகஸ்தர்கள் தெரிந்தெடுக்கப்பட்டனர். நிர்வாக சம்பந்தமான பல பிரிவுகளுக்கும் வெவ்வேறு சப் கமிட்டிகள் நியமிக்கப்பெற்றன. அடுத்த வருஷத்தில் சென்னையிலும் வெளியூர்களிலும் தொழிலாளர் சங்கங்களை நிர்வாகிப்பதற்காக ஒரு தொழிலாளரை சம்பளத்தில் நியமிக்கும்படி 300 ரூபாய் நிர்வாகக்கமிட்டி வசம் ஒப்படைக்கும்படி தீர்மானிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

* * *

20-5-23 மாலை சென்னை ஹைகோர்ட் கடற்கரையில் சென்னை தொழிலாளரின் மகாநாடு ஒன்று ஸ்ரீமான் ஈடேச முதலியாரவர்களின் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. அப்போது சட்டசபைகளுக்கும் சர்க்கார் உத்தியோகங்களுக்கும் தொழிலாளர் பிரதிநிதியாக முதலாளி வர்க்கத்திலிருந்தே பிரதிநிதிகள் தெரிந்தெடுக்கப்பட்டால் தொழிலாளர் குறைகளைத் தீர்த்துக்கொள்ளமுடியவில்லையாதலால் தொழிலாளர்கள் பூரண பிரதிநிதித்வம்பெறுமாறு வேண்டுவதாகத் தீர்மானிக்கப்பட்டது.

* * *

பம்பாய்மாகாண மிதவாதிகளின் 2-வது மகாநாடு 19-5-23 ல் காரட்என்னுமிடத்தில் ஸ்ரீமான் வி. எம். காந்தியின் அக்கிராசனத்தின்கீழ் கூடியது. மகாநாட்டிற்கு சிலரே விஜயஞ் செய்திருந்தனர். உலகத்தின் தற்போதிய நிலைமையில்பல புதுப்புது கக்ஷிகள்தோன்றுவதைக் கண்டு மிதவாதிகள் பயப்படுவதாகத் தெரிகிறது.

* * *

தேசமகாசபையின் ஓர் பிரிவாகிய சுயராஜ்யக் கக்ஷியைப் பலப்படுத்தும் பொருட்டு சென்னைமாகாணத்தின் பல முக்கிய இடங்களுக்கு டை கட்சியின் சென்னைத்தலைவர்களான ஸ்ரீமான் எ. ரெங்கசாமி அய்யங்காரும், ஸ்ரீமான் எஸ். சத்தியமூர்த்தி அய்யரும்சென்று பல கூட்டங்கள்கூட்டி வருவதுடன்ஜூன் மாதத்தில்சென்னை மாகாணத்திற்கு விஜயமாகப்போகும்டை கட்சி ஸ்தாபகர் ஸி. ஆர். தாஸ் அவர்களை வரவேற்கவும் பலத்த முயற்சி செய்து வருகின்றனர்.

* * *

சிவகெங்கை மௌன தேசிகர்மடத்தில் ஓர் பெரியவர் 15-5-23 ல் இரவு சுபசோத்தில் பல திரளான ஜனங்கள் கூடியிருக்க சமாதியுள் புகுந்தனராம். இன்னும் ஒரு வருஷகாலத்தில் அறையைவிட்டு வெளி வருவதாகச் சொல்லியிருக்கிறாராம்.

* * *

சென்ற வாரத்தில் மகாத்மாகாந்தி ஏர்வாடா சிறையில் 105 டிகிரீ ஜுரங்கண்டு தேகம் மெலிவடைந்திருப்பதாக பூனாப்பத்திரிகை ஒன்று வெளியிட்டிருந்தது. இதை ஆக்ஷேபித்து, சுமார் 2வாரங்களுக்குமுன் உபாயமான ஜுரங்கண்டதென்றும் தேகமெலிவடைந்திருப்பது உண்மைதானென்றும் தற்போது சுகமடைந்துவருவதாகவும் பம்பாய் கவர்ன்மெண்டார் ஓர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார்கள். உண்மையை விசாரிக்கப்போனால் தற்போது அவர் தேகமெலிவுடன் இருப்பதாகவும் வயிற்றுக்கடுப்பு நோய்கண்டு சுகமடைந்து வருவதாகவும், சொல்லப்படுகிறது.

* * *

சென்னைமாகாண ஆரம்ப ஆசிரியர் 3-வது மகாநாடு 19-5-23ல் திருநெல்வேலியில் சட்டசபை மெம்பர் ஸ்ரீமான் ஆர் கே. சண்முகஞ் செட்டியார் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் கூடியது. இதர தேசங்களில்போல சமூகஉணர்ச்சி விளைதற்பொருட்டும் அரசியல் உணர்ச்சிக்குச் சாதனமாகவும் தாம் பிறந்த நாட்டில் அபிமானமும் பயபக்தியும் நமது சிறுவர்கள் உள்ளத்தில் பதியுமாறு ஆரம்பக் கலாசாலைகளிலேயே பெருமுயற்சிசெய்யவேண்டுமென அக்கிராசனப் பிரசங்கத்தில் வெகு அழுத்தமாய்ச்சொல்லப்பட்டிருக்கிறது.

குல நலம் விரும்புக!

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

நாடார்குல மித்திரன்

ருத்ரோத்காரிஞு வைகாசிமீ 19உ

## நாடார் மகாஜன சங்கம் 9-வது கான்பரன்ஸ்.

நமது நாடார் மகாஜன சங்கம் 9-வது கான்பரன்ஸ் இவ்வாண்டில் திருநெல்வேலியில் கூட்டவேண்டுமென்று இதற்கு முன் பலதடவையாகப் பிரஸ்தாபித்துவந்திருப்பதை நேயர்கள் நன்கறிந்திருக்கலாம். சமீபத்தில் அது விஷயமாய் நாடார் மகாஜன சங்கத்திலிருந்து திருநெல்வேலியிலுள்ள முக்கியஸ்தர்களைக் கலந்து பேசி முடிவுசெய்வதற்காகப் புறப்பட்டுச்சென்ற காரியதரிசியவர்களால் அதன்முடிவைப்பற்றி இன்னும் அறிக்கை வெளியிடப்படவில்லை. ஆயினும் திருநெல்வேலி, ஆறுமுகநேரி, முக்கூடல் ஆகிய மூன்று ஸ்தலங்களிலுள்ள முக்கியஸ்தர்கள் திருநெல்வேலியிலேயே கான்பரன்ஸ் நடத்திவைக்க ஒப்புக்கொண்டிருப்பதாயும் ஒரு வாரத்திற்குள் அது சம்பந்தமான அறிக்கைப் பத்திரம் ஒன்று வெளியிடக் கூடுமென்றும் நமக்கு மற்றொரு இடத்திலிருந்து தகவல் கிடைத்திருக்கிறது. அதன் பிரகாரம் அறிக்கை வெளிவருமென்றே நம்புகின்றோம்.

கான்பரன்ஸ் வழக்கமாய்க்கூடும் காலம் வெகு சமீபத்திலிருப்பதினாலும் சட்டசபை விஷயமாய் அவசரமாக ஆலோசித்து முடிவுசெய்யவேண்டியது அத்தியாவசியமாக இருப்பதினாலும், இவ்வாண்டில் மேலே செய்யவேண்டிய பல காரியங்களைப் பற்றியும் கான்பரன்ஸ் முடிவு செய்யவேண்டியதிருப்பதினாலும் காலதாமதப்படுத்தாமல் உடனே அறிக்கை வெளியிட்டு உபசாரணைக்கமிட்டியும் நியமனஞ்செய்து கான்பரன்ஸ் கூடுங்காலத்தையுங் குறிப்பிட்டு விடும்படி கோருகின்றோம்.

இவ்வாண்டில் கூடுங் கான்பரன்ஸுக்கு சிலோன், பர்மா, பினங்கு, மலாக்கா முதலிய விடங்களிலிருந்தும், இந்தியாவின் பல பாகங்களிலிருந்தும் கான்பரன்ஸ் எங்கேகூடுகிறது எப்போது கூடுகிறது என்ற கேள்விக் கடிதங்கள் நமக்குஅனுதினமும் வந்து குவிந்துகொண்டிருக்கிறது. ஒருவருஷத்திலாவது இவ்வளவு கடிதங்களைநாம்பார்த்ததேயில்லை, ஆகையால், கான்பரன்ஸ் விஷயமாக ஜனங்களுக்குள் எவ்வளவு பரபரப்பிருக்கிறதென்பதையும் இவ்வருஷத்தில் அதிகமான ஜனப்பிரதிநிதிகள் விஜயஞ்செய்வார்களென்பதையும் மிகைபடக்கூறல் அவசியமின்றென விடுத்தாம்.

ஜனங்களுடைய மனோபேட்சையைப் பூர்த்திபண்ணிவைப்பது ஜனத்தலைவர்களின் பொறுப்பான கடமையாயிருப்பதாலும், மேலும் திருநெல்வேலி ஜில்லா நான்குநேரித்தாலுகாவில் செம்புலிங்க நாடார் விஷயமாய் போலீஸ் அதிகாரவர்க்கத்தினர் பரமசாதுக்களாயுள்ள நாடார்களின்மீதுதப்பர்த்தம் உண்டுபண்ணி ஜனங்களை கஷ்டநிஷ்டூரம் செய்து கொண்டிருப்பதை கான்பரன்ஸ் மூலமாக கவர்ன்மெண்டுக்குத்தெரியப்படுத்தி ஜனங்களின் மனக் கலக்கத்தை மாற்றவேண்டியது அவசியமாயிருப்பதாலும், திருநெல்வேலி ஜில்லா ஜனத்தலைவர்கள் கான்பரன்ஸ் கூடுங்காலத்தை வெளியிடுவதில் காலதாமதங் காட்டலாகாதென மீண்டும் வற்புறுத்திக் கூறுகின்றோம்.

திருநெல்வேலியில் கான்பரன்ஸ் கூடப்போவதில் விருப்புற்றுளதிர்நோக்கியிருக்கும் மகாஜனங்கள் வெறுப்புற்று ஏமாந்துவிடா வண்ணம், முன்னெச்சரிக்கையுடன் எடுத்தகாரியத்தை விடாமல் நடத்தி வெற்றி பெறுவார்களென்று நம்புகின்றோம். (அவைக்குகௌரவச் சேர்மனாக அழைக்கவேண்டியது ஸ்ரீமான் வி. பி. இராமசாமி ஐயரவர்களையே) யென நமது நிருபர் ஒருவர் முன்னரே குறிப்பிட்டிருப்பதையும் ஞாபகப்படுத்துகின்றோம்.

## உசிலம்பட்டி.

நமது நாடார்குல மித்திரனுக்கு திரண்ட ஒரு மூலதன மிருப்பின் மித்திரனை வாரப்பிரசுரமாக்கி பக்கங்களை அதிகப்படுத்தி சகலஜனங்களும் எளிதில்வாங்கி வாசிப்பதற்கேற்றவாறு சந்தாத்தொகையை சொற்பமாக வைத்துக்கொள்ளலாமென்று சின்னாட்களுக்கு முன்னர் சிலோன், பர்மா முதலிய விடங்களுக்கு நாம் சுற்றுப்பிரசாரம் செய்துவந்ததையாவும்விஸ்தாரமாக வெளியிட்டிருப்பதை நேயர்கள் படித்துணர்ந்திருக்கலாம்.

உள்நாட்டிலும் நமது பிரசாரத்தை ஆரம்பிக்குமுன் முதலாவதாக மதுரை ஜில்லாவின் மேல்வட்டகையில் ஆரம்பிக்கலாமென்று தீர்மானத்துடன் அஜ்ஜில்லாமேல் வட்டகையில் முக்கியமான உசிலம்பட்டிக்கு நாமும் நமது ஆபீஸ் மானேஜர் மிஸ்டர் திருமேனி நாடாரும் 22-5-23 ல் அங்கு விஜயஞ் செய்திருந்தபோது அங்குள்ள நாடார் குலாபிமானிகள் நன்குவரவேற்றுபசரித்து அன்றிரவு நாடார்கள் பொதுப் பேட்டையில் நாடார்பொதுஜனர் கூட்டமொன்று கூட்டினார்கள். அங்கு, நாடார் குல மித்திரன் செய்துவந்திருக்கிற வேலைகளையும் இனிச் செய்யப்போகிற வேலைகளையும் நம்மால்ச்சொல்லக்கேட்டு மித்திரன் பாலன்புகூர்ந்து அவர்கள்காட்டிய கருணையை மற்றோர் பக்கத்தில் பதிவுசெய்திருக்கின்றோம். இன்னமும் இரண்டொன்று கனவான்கள் போஷகராகச் சேர்ந்துகொள்வதாக வாக்களித்திருக்கின்றார்கள். நன்றென்பதை இன்றே செய் யென்ற முதுமொழிக்கிணங்க மித்திரனுக்கு ஒத்தாசை செய்வது அவசியமெனக் கொண்டும் மற்றுமிடங்களுக்கு நாம் பிரசாரஞ் செய்வதற்கு நமக்கு ஊக்கமுண்டாக்க வேண்டும்பொருட்டும் அவர்கள் உதார குணத்தினால் உண்மையோடு போஷகர் நிதிக்கும் க்ஷேமநிதிக்கும் உடனே பொருளுதவி செய்திருப்பதைப்பாராட்டி நமது மனமார்ந்த வந்தனத்தைச் செலுத்துகின்றோம்.

உசிலமாநகர் மதுரை ஜில்லா மேல்சாகத்தில் நீர்வளம் நிலவளம் மலைவளம் முதலிய நல்வளங்கள் அமையப்பெற்றதும், வாரம்ஒரு முறை பதினாயிரக்கணக்கான ஜனங்கள் சந்தை கூடுமிடமாயுள்ள ஒரு சிறந்த நகரமென்பதில் ஐயமில்லை. அங்கே நாடார்கள் சுமார் 200 தலைக்கட்டுகளிருக்கின்றன. அவர்களில் பெரும்பாலோர் வர்த்தகர்களாகவும் பிரபல மிராசுதார்களும் பாங்கர்களும் தாலுகாபோர்டு ஜில்லாபோர்டு மெம்பர் ஸ்தானங்களைப் பெற்றவர்களும் கல்வி அறிவு ஒழுக்கங்களிற்சிறந்தவர்களும் வேதாந்த சாஸ்திர விற்பன்னர்களும் நிறைந்துள்ளார்கள். பிரபலமிராசுதாரரான ஸ்ரீமான் ப. வீ. ஆதிமூர்த்திமாலை நாடாரவர்கள் வெகுகாலமாக அவ்வூர் யூனியன் சேர்மனாயிருந்து பொது ஜனங்களுக்கு வெகு நன்மை செய்துகொண்டிருக்கிறார்கள். நாடார்களுக்கென ஒரு பாடசாலை அங்குஅமைக்கப்படவில்லையாயினும் கவர்ன்மெண்டு பாடசாலையில் பிள்ளைகளைப்படிக்கச்செய்யும் வகையில் மேம்பாடுடையவர்களாகவுமிருக்கிறார்கள். நாடார்கள் சமூக நிர்வாகத்தில் பெரியோர்களுக்கும் பாலியர்களுக்கும் சில அபிப்பிராயபேதங் காணப்பட்டினும் நிருவாகம் விக்கினமின்றி நடப்பதில் மிகவும் ஒற்றுமையுடையவர்களாகவுந் தெரிகிறது. ஸ்ரீமான் ப. வீ. ஆ. அவர்கள் வயதிலும் அனுபவத்திலும் புத்தியிலும் உயர்ந்தவராகக் காணப்படுவதால் சமூக நிர்வாக விஷயத்தில் மற்றவர்களும் அப்பெரியாரைப் பின்பற்றிச் சென்றால் மிகவும் சிலாக்கியமா யிருக்குமென்று நம்புகின்றோம். தவிர அவ்வூரில் நாடார்களுக்கென தனியாக ஒரு பாடசாலை வேண்டிய அவசியமில்லாதிருப்பதால் கைத்தொழிற்சாலை ஒன்றுவேண்டியதவசியம். வர்த்தகமும் விவசாயமும் இயற்கையாகக்கொண்ட அந்நகர் நாடார்களுக்கு ஒரு நெசவுத்தொழிற்சாலை ஒன்றிருக்குமானால் வெகு மேம்பாடுடையதாகுமென்பதை அவ்வூர் நாடார் குலாபிமானிகள் கவனிப்பார்களாக.

## குறிப்புகள்.

### காலஞ் சென்றார்.

நமது குலாபிமானியும், தமிழ்வித்துவானும், நாடார் மகாஜன சங்கச் சங்கீதமஞ்சரிபோன்ற, பல அரியசங்கீதநூல்களுக்கு ஆசிரியரும், தற்சமயம் தென்னிந்திய நாடக மேடைகளில் இணையில்லையென பெயர்பெற்ற பாலியர்களைக்கொண்ட ஸ்ரீ ஆரியபால கான சபையின் அதிபதியும் உடுமலை ஸ்ரீமான் கன்னிசரபகவி முத்துசாமியவர்களின் மாணவரும், தமிழ்நாடக சங்கீத சாகித்ய உபாத்தியாயரும், சென்னை ஸ்ரீமான் ஏ. கூ. சங்கரலிங்க நாடாரவர்களின் அருமைத் தர்ம பத்தினியாரவர்கள் நாளது 24-5-23 ல் மாலை சுமார் 4 மணிக்கு, தனது 27 வயதில் இம்மண்ணுலகத்தைவிட்டு விண்ணுலகம் சென்றுசென்ற செய்தி எட்டி பெரிதும் வருந்துகின்றோம். நாமும் நமது அனுதாபத்தை அன்னவருடைய குடும்பத்தாருக்கு தெரிவித்துக் கொள்ளுகிறோம். எல்லாம்வல்ல இறைவன் அன்னவர்களுடைய குடும்பத்தாருக்கு நல்ல ஆறுதல் அளிப்பாராக.

• • •

### கவனமின்மை.

இவ்வருடத்தில் சென்ற சில மாதங்களாக, நாடார் மகாஜன சங்கப் பிரசாரமே மிகவும் குறைவாக நடந்து வருகிறதாகத் தெரிகிறது. கிராமாந்திரங்களில் பிரசாரம் விஷயமான நிருபங்கள் வரவு குறைந்துகொண்டே வந்து தற்சமயம் சுத்தமாக நமக்கு வருகிறதேயில்லை. இதற்குமுன்னால் இது விஷயமான நிருபங்கள் வந்து குவிந்துகொண்டே யிருக்கும். இதனால் மகாஜன சங்கப்பிரசாரம் தீவிரமாய் நடைபெறவில்லை என்றே யூகிக்க வேண்டியதிருக்கிறது. கிராமாந்திரங்களில் இடைவிடாது பிரசாரஞ் செய்து கொண்டிருந்தால்தான் நம்மகாஜனங்களுக்குள்ள முயர்ச்சியும் கிளர்ச்சியும் தளரா ஊக்கமுடனிருந்துகொண்டுவரும். அதனினும் தீவிர பிரசாரத்தின்மூலமாய்த்தான் நமது மகாஜன சங்கத்திற்கு நம்மவர்களின் அன்பும் அபிமானமும் ஆதரவும் பெரிதும்கிடைக்கவேண்டியதிருக்கிறது. இது விபரமும் நமது காரியதரிசிகளும் இதர மகாஜனசங்க நிர்வாகிகளும் அறியாததில்லை, நம்குல கிராமஜனங்கள் பிரசாரகர்களின் வரவை அதிக ஆவலோடு எதிர் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அதிக கவனத்துடனிருக்கிறார்களென்பதற்கு அவர்கள் "எங்களுக்கு பிரசாரகர்களை அனுப்புங்கள்" என்று எழுதுவதிலேயே தெரிகிறது. ஆகையால் மகாஜனசங்கக் காரியதரிசிகள் இன்னும் அதிகமானபிரசாரகர்களை ஏற்படுத்தியாவது பிரசாரம் சரியாய் கிராமாந்திரங்களில்நடைபெறச்செய்வார்களென்றே நம்புகின்றோம்.

## மதுரை.

(நமது நிருபரிடமிருந்து.)

நாடார் மகாநாடு:—மதுரை நாடார் மகாஜன மகாநாடு 22-5-23 செவ்வாய்க்கிழமை இரவு 8-மணிக்கு ஸ்ரீ மொட்டவிநாயகர் கீழப் பேட்டையில் ஸ்ரீமான் க. சு. வி. அ. சி. ஆறுமுக நாடார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. அவ்வமயம் நம்குல முன்னேற்றமென்னும் விஷயமாய் ஸ்ரீமான்களான நாடார் மகாஜன சங்கம் பிரசாரகர் ஸ்ரீமான் செல்வபதிராஜு நாடாரவர்களும் ப. ரா. முத்துச்சாமி நாடார் அவர்களும் பேசினார்கள். முடிவுரையில் அக்கிராசனர் அவர்கள் மகமை சீர்கேட்டையும் பேட்டையின் நிலைமையையும் பற்றி உண்மையுடன் கண்டித்தது குறிப்பிடத்தக்கது.

• • •

மதுரை ஜில்லா அபேக்ஷகர்—மதுரை ஜில்லாவின் தொகுதிக்கு சென்னை சட்டசபையில் அங்கத்தினர் பதவியை வகிக்க முன்வரும் நம்குல அபேக்ஷகர்களுக்கு நாடார் ஊழியப் பிரசாரகர் தனது பூரண உழைப்போடு வேலை செய்ய முன் வந்துநிற்கிறது. இந்த ஜில்லாவில் நம்மவர்களுக்கு ஒரு ஸ்தானம் நிச்சயம் கிடைக்குமென அச்சபையார் ஆதாரத்துடன் உறுதி கூறுகிறார்கள். அபேக்ஷகர்களின் பெயரை இப்படியார் ஆவலுடன் எதிர் நோக்கி நிற்பது சிலாக்கிக்கத்தக்கது.

• • •

கோலை—மேலமாசி வீதியில் வசிக்கும் ஒருவாலிபன் தனக்கு மணஞ்செய்வதாய் வாக்களித்திருந்த ஒரு பெண்ணை பிறரொருவருக்கு விவாகஞ் செய்ய எத்தனிப்பதை அறிந்து மணமகளின் தகப்பனையும் சகோதரனையும் குற்றுயிராக்கி விட்டு தானும் உயிர்துறந்தான் விசாரணை நடந்து வருகிறது.

## குழந்தையும் தெய்வமும் கொண்டாடு மிடத்தே.

"பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த மக்கட்பே றல் லபிற"

"தம்பொரு ளென்ப தம்மக்க ளவர் பொருட் டந்தம் வினையான் வரும்"

குழந்தைகளை அடியாதீர்கள்! திட்டாதீர்கள்! கோபியாதீர்கள்! பயமுறுத்தாதீர்கள்! குழந்தைகளை அன்பினால் ஆட்சிசெய்யுங்கள்!

நீங்கள் குழந்தைகளை அடித்தாலும் திட்டினாலும் கோபித்தாலும் பயமுறுத்தினாலும் உங்கள் நற்குணம் முதன் முதலில் கெடுகின்றது. நீங்கள் கொரோவான்களாகின்றீர்கள். நீங்கள் இழைக்கும் தீமை உங்களுக்கே திரும்புகின்றது.

உங்கள் குழந்தைகளின் குணம் கெடுகின்றது.

உங்கள் குழந்தைகள் பயங்காளிகளாவார்கள்; கபடஸ்தராவார்கள்; கோழைத்தனமுடையோராவார்கள்; உற்சாகமிழப்பார்கள்; சாந்தநிலை கெடுவார்கள்; நிஜநிலை கெடுவார்கள்; உடல்வருந்துவார்கள், உயிர்வருந்துவார்கள், நெஞ்சம் புழுங்குவார்கள்; அறிவுமழுங்குவார்கள், காருண்ணிய மிழப்பார்கள்; தன்மதிப்பு, தன்ன ம்பிக்கை, தன்முயற்சி, தன்னடக்கம் இவை கெடுவார்கள். பிறரிடமும் உங்களிடமும் அவநம்பிக்கை கொள்ளுவார்கள். பிறரைத் துன்புறுத்துவார்கள்; அச்சுறுத்துவார்கள்; உங்களை வெறுப்பார்கள்

இத்தீமை தலைமுறைதோறும்வள... இஃது நாகரீகமன்று! இஃது தீயவழி! இஃது கெட்டமுறை! இதனை விட்... ழியின்!

அன்பே சிவம்! அன்பே ஆன... அன்பைவளர்மின்! அன்பை அளி...

உலகுபுது வாழ்வுறவேண்டின் குழந் தைகளை அன்பினால் ஆளுங்கள்!

1. குழந்தைகளிடம் தன்மதிப்பு, தன்னம்பிக்கை, தன்முயற்சி, தன்னட... இவற்றை வளருங்கள்!

2. குழந்தைகளுக்குப்போதிய சுதந்... ரத்தை வழங்குங்கள்!

3. குழந்தைகளிடமுள்ள தெய்வத்தன் மையைப் போற்றுங்கள்!

இதுவே நாகரீகம்! இதுவே இறைவன் தொண்டு! இதுவே உண்மை! ...னந்தம்! அன்புடையோரே! விழி... எழுமின்! குழந்தைகளைக்காருமின்! ...ஞர் தெய்வ இயல்பு பற்றுமின்!

பஞ்சாபகேசய்யர்,
கடம்பூர்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

## பட்டிவீரன்பட்டியே! எழுந்திரு உன்குலமக்களைக்காப்பாற்று.

என் குலத்தவர்களே! பத்துலட்சம் ஜனத்தொகை கொண்ட நம்ஜனசமூகத்தின் தலைமைஸ்தானத்தை பொறையாறும், உபத் தலைமை ஸ்தானத்தை பட்டிவீரன்பட்டியும் வகித்து வருகிறதென்பதை நன்ருய் அறிவீர்கள். தலைமை ஸ்தானத்தை ஒப்புக் கொண்ட பொறையருனறு சமயம் வாய்த்தபோது தனது கடமையைச் செய்து வருகிறதெனினும், நம் ஜனசமூகத்தின் தேவைக்குத் தக்கபடி முயர்ச்சி எடுத்துக் கொள்ள அதற்கு அவகாசமில்லாததால் நம் ஜனசமூகத்தின் சகல பொறுப்பையும் பட்டிவீரன்பட்டியே முன்னின்று ஏற்று அரசாட்சி செய்து வந்திருக்கிறதென்பதை காதாரக் கேட்டும், கணுரக்கண்டும் வாயாரவாழ்த்தியும் மகிழ்ந்திருக்கின்ருேம்.

என் இனத்தவர்களே! பட்டிவீரன்பட்டி நமக்கு செய்திருக்கும் அரிய பெரிய விஷயங்களை நினைக்குந்தோறும் பேசுந்தோறும் அளவிலா ஆனந்தத்தைஉண்டாக்குகிறது. சுருங்கச் சொல்லின் நம்ஜனசமூக அரசாட்சியை நிர்வகிக்க கடவுளால் நமக்கு கொடுக்கப்பட்ட அரசர்கள் வசிக்கும் அரசர் புரம் என்றே சொல்ல வேண்டும்.

அந்தோ! இப்படிப்பட்ட பட்டிவீரன்பட்டியானது சொர்ப காலமாக ஏதோ மனத்தாங்கல்களால் வேற்றுமைப்பட்டு கட்சிகள் உண்டாகி சிலபல விஷயங்கள் நடந்து வருவதைப் பார்த்தால் நம்முன்னேர்கள்செய்த தவக்குறைவின் தண்டனை என்றே கருதவேண்டும் கொஞ்சகாலமாக அங்கு ஏற்பட்டிருக்கும் வேற்றுமைக் காரணத்தால் பத்து லட்சம் ஜனத்தொகை கொண்ட நம் ஜனசமூகத்துக்கு விளைந்த நஷ்டங்கள் பலவுண்டு. ஐயன் மீர்! பட்டிவீரன்பட்டியானது கொஞ்ச காலமாக இருந்துவருவதுமல்லால் அல்லலன்றியிருக்குமாளுல், ஒன்டாவது மகாநாடு எந்தவூரில் கூட்டலாம் சட்டசபைக்கு யார் யாரை தேர்ந்தெடுக்க ஏற்பாடு செய்யலாம் என்ற வியாசகங்கள் இன்றும் நம்குலப் பத்திரிகைகளில் வந்துகொண்டிருக்கு மென்று நினைக்கிறீர்களா? இருப்பதுமில்லை. ஒன்பதாவது மகாநாடு இன்ன இடத்தில் கூடுமென்று உறுதியாகி வேலைகளும் துரிதமாக நடந்து கொண்டிருக்கும். சட்டசபைக்கு செல்பவர் இன்னுரென்று உறுதியாகி அதற்கும்வேண்டிய காரியங்கள் நடந்து கொண்டிருக்கும் என்ன செய்வோம்.

கடவுளே; எங்களைக்கண்பார் நீயொருவன் இருக்கிருய் என்று அறியாத மானிடர்கள் பலர் என் இனத்தவர்களைபல கஷ்டத்திற்குள்படுத்தியதை சகிக்காது சிறிது ஆதரவு எங்கள்பால் காட்டிவரும் நீ எங்களைச் சோதிக்காமல் எங்கள் மேல் அன்பு வைத்து ஆதரவு செய்? பட்டிவீரன்பட்டி ஸ்ரீமான்களான கூ. ச. நா. பெரியதம்பி நாடார் அவர்களுக்கும், வ. பு. அ. மாரிமுத்து நாடார் அவர்களுக்கும், வ. பு. அ. சௌந்திரபாண்டிய நாடார் அவர்களுக்கும் நீண்ட ஆயுள் கொடுக்க சதா உன்னைபோற்றுகிருேம். ஸ்ரீமான் வ. பு. அ. சௌந்திரபாண்டிய நாடார் அவர்களை மதுரை ஜில்லாவுக்காகச் சென்னை சட்டசபைக்கு அபேட்சகராக விருப்பதாய் ஸ்ரீமான்களான கூ. ச. நா. பெரியதம்பி நாடார் அவர்களும் வ. பு. அ. மாரிமுத்து நாடார் அவர்களும் நாடார் மஹாஜன சங்கத்தின் மூலமாகவாவது நாடார்குல மித்திரன் மூலமாகவாவது என் ஜனசமூகத்தாருக்கு அறிவித்து எங்கள் கவலையை நீக்க ஒருசுபதினத்தை சீக்கிரம் கொடுத்தருள சதா பிரார்த்திக்கிறேம். இறைவா! கடைக்கண்பார் கருணை செய்!! "குமார்"

### வத்திருயிருப்பு,

### நாடார் மஹாஜன கிளைச் சங்கம் 3-வதுஆண்டு நிறைவுவிழா.

நாளது ருத்ரோக்காரி௵ ஆனிமீ 3௳ (17-6 23) ஞாயிற்றுக்கிழமை காலை 9-மணிக்கு நாடார் எலிமெண்டரி வித்தியாசாலையில், சிவகாசியில் நடந்த 8-வது கான்பரன்ஸ் உபசரணைக்கமிட்டி வைஸ் சேர்மன் ஸ்ரீமான் எஸ். நடராஜ நாடார் B. A. B. L. அவர்கள் தலைமையின் கீழ் நடைபெறும். அவ்வமயம் சிலபெரியோர்களால் உபந்நியாசம் நடைபெறுமானதால் சுற்றுக் கிராமங்களிலுள்ள கனவான்கள்யாபேரும்மீட்டிங்குக்கு த்தவருது விஜயம் செய்யுமாறுகேட்டுக் கொள்கிறேம் என்று ச. வே. பழனியப்ப நாடார் எழுதுகிறார்.

## சுதந்திரம்.

(முன் தொடர்ச்சி)

நவீன உலகத்தில் ஒவ்வொருவரும் தங்கள், ஜாதியோ, மதமோ, தேசமோ அதிகாரஸ்தானத்தை அடைவதுதான் சுதந்திரமென்று கருதப்படுவதால்த்தான் எந்த இடத்திலும் சமாதானக்குறைவு காணப்படுகிறது. இப்பேர்ப்பட்ட பேராசையால் தங்கள் வழக்கபழக்கங்களையும் ஆசார ஒழுக்கங்களையும் மாற்றிக்கொள்ளநேரிடுகிறது. இந்தியர்கள் மேனுட்டு முறையில் பயங்கியிருந்தாலும் தங்கள் கொள்கைகள்தான் சிரேஷ்டமாயிருப்பதால் மேனுட்டு கொள்கைகளுக்கு அடிமையாயிருக்ககூடாதென்று உணர ஆரம்பித்து பலஒட்டிலே மை அடையமுயலுகிருர்கள். இதுதான் சமயமென்று சில ஜாதியார்கள் கேட்டறியாத சுதந்திரங்களை அடையவிரும்புவதும் அதை மற்றவர்கள் அங்கீகரிப்பதும் மனுஷ இயற்கையே யானுலும் மற்றவர்களுடைய சுதந்திரங்களை தடுப்பத்த தங்கள் முன்னேற்றமென்று கருதும் பக்தமதியினர்களை என்னென்று சொல்லுவது! பாண்டிய நாட்டில் நாடார்கள் விரும்பும் ஆலய சுதந்திரம் அவர்களுக்கு புதிதாய்கிடைக்கும் உரிமையாயில்லாமல் முன்னுல் அனுபவித்து இழந்ததையே மீண்டும் அடைய விரும்புவதாயிருந்தும் அதனுல் மற்றவர்களுக்கு எவ்வித கஷ்ட நஷ்டமில்லாதிருந்தும் நாடார்களைத் தடுப்பதற்கு ஏதாவது சாஸ்திர ஆதாரம் கிடைக்குமாவென்று பாதாளமுதல் மேலுலகம்வரை சிலர் பறந்து திரிகிருர்கள் அந்தோ! ஒன்றுங்கிடைக்கவில்லை. பாவம்! அவர்கள் பிரயாசைக்குறைவல்ல நாடார்கள்பரம்பரை ராஜவம்சத்தவர்களென்று சாஸ்திரங்கள் மேறிகளில் சிலர் கள்ளிறக்க, மரமேறிகளெல்லாம் கள்ளிறக்குகிறவர்களென்றும், ஒரு ஜாதியில் சிலர் மரமேறுவதால் அந்த ஜாதியே மரமேறிகளென்றும் கள்ளிறக்குபவர்களென்றும் சொல்லித் திரிகிறவர்களுமுண்டு. இதெல்லாம் பாண்டிநாட்டில் நாடார்களை அகௌரவப்படுத்த பிரயாசைப்படும்சிலஅற்பர்கள்வேறுவழியில்லாததால் இதுதான் வழியென்று பிடித்துக்கொண்டார்கள். நாடார்களைத் தவிர இதர ஜாதியார்களும் கள்ளிறக்குகிருர்கள் என்று சொல்வதோடு மட்டும் நின்றுவிடமுடியவில்லை. பனைவாழும் நாடார் சகோதரர்கள் சிறுபான்மையோரான தாங்கள்செய்யும் சண்டாளத் தொழிலால் உத்தமகுடித்திரிய நாடார்ஜாதிக்கே மகத்தான அவமானம் ஏற்படுவதோடு சகித்கொள்ளு கஷ்டத்திற்கும் ஆளாக்குகிறதென்பதை அறிந்தும் அந்தத் தொழிலை அறவே பொழித்துவிட முன்வாரததேனே! தங்கள் குலதர்மமல்லாத கள் இறக்குவதும் பனை ஏறும் தொழிலையே ஒழித்து தங்கள் ஜாதியைப்புனிதப்படுத்த ஒவ்வொருவரும் முன் வருவார்களா? நீங்கள் படும் கஷ்டத்தை வேறு தொழிலில் பட்டால் அதற்குமேலான லாபம் அடையலாமென்பதை மறந்து, உங்கள் ஜாதியின் மானத்தைக்காப்பாற்றும்பொருட்டு சண்டாளத்தொழிலை விட்டு உங்கள் கடமை! இதில் கொஞ்சமும் தாமதம் வேண்டாம். நாடார் ஜாதியை எந்தவழியிலும் குறைசொல்லமுடியாத பேதைகளும் நோதைகளும் கள்இறக்குவது நாடார் ஜாதியின் தொழிலென்று கற்பித்து நம்மனதைப் புண்படுத்துகிருர்களே! இது உங்களுக்குச் சம்மதமா! இல்லையானுல் நம் ஜாதிக்குப் புறம்பான தொழிலை உடனே நிறுத்தி அவர்கள் ... அடக்கமுன் வாருங்கள். நாடார் மகாஜன சங்கமும் நாடார் பொதுஜனங்களும் அவர்களுக்கு ருஜுப்பித்துவிட்டன. இருந்தாலும் அவர்கள் மனம் சாந்தியடையவில்லை. இந்தியாவில் ஒவ்வொரு தொழிலைச் செய்பவர்கள் ஒவ்வொரு ஜாதியாராகக் கருதப்பட்டார்கள். அன்னிய அரசாக்ஷி ஏற்பட்டதிலிருந்து ஒவ்வொரு ஜாதியாரும் தங்கள் குலத்தொழிலை விட்டு பல வேறுதொழிலில் புகுந்தாலும் பழையஜாதி பரம்பரைமட்டும் மாருமல் வலுத்துவிட்டது. இந்தியாவில் முக்கியமாய் தமிழ்நாட்டில் தேசீய ஒற்றுமையை உண்டுபண்ண வேண்டுமானுல் ஜாதியவித்தியாசங்களை ஒழித்து பழைய கைத்தொழில்களை விருத்திசெய்யவேண்டுமென்று தலைவர்கள் உணர்ந்து வேலை செய்து வருகிருர்கள். பாண்டியநாட்டில் நாய்க்கர் அரசாக்ஷி ஏற்பட்டவுடன் இதர ஜாதியார்களைப்போல் நாடார்களும் பல வேறுதொழிலைச்செய்தாலும் வேறு தொழில்செய்ய அறிவும் ஒத்தாசையில்லாமலும் மற்றவர்களுடையஇம்சைக்குக் கட்டுபட்டும் சிலர்பனைமரமேறும் தொழிலைக்கொண்டார்கள் மரமேறுந்தொழிலோ மற்றவர்களைப்போல் வஞ்சகம் இச்சகம்பேசி பணம் பறிக்குந்தொழிலல்லாமல் நெற்றிவேர்வை நிலத்தில்விழ சரீரப் பிரயாசையோடு செய்யுந்தொழிலாயிருந்தாலும் அதனுலுண்டாகும் பலன் விரும்பத் தகாததாயிருக்கிறது. கருப்புக்கட்டி, பனங்கற்கண்டு காய்ச்சுவதற்கு அனுகூலமாய் பனஞ்சாறு (பதனீர்) இறக்கப்பட்டாலும் சிலரால் கள்ளென்னும் மதுவும் பனையிலிருந்து இறக்கப்படுகிறது. அந்தோ! மதுவானது பொதுஜனங்களின ஆசாரத்திற்கும் ஒழுக்கத்திற்கும் மானத்திற்கும் குடும்பவாழ்க்கைக்கும் கேடுஉண்டுபண்ணுகிறதால் அதை அறவேஒழிக்கவேண்டுமென்று சகல மதஸ்தர்களும் ஒப்பமுடிந்தவிஷயம். மரம் உங்கள் தியாகத்தை எதிர்பார்க்கிறது. தென்னுட்டு சகோதரர்களே! எழுந்திருங்கள். நாடார் ஜாதியின் மானம் காப்பாற்றப்படவேண்டுமானுல், அந்த ஜாதி இழந்தசுதந்திரங்களை மீண்டும் அடைய விரும்பினுல் இன்றேஉங்கள்சமீபத்திலுள்ளவர்களை சமாதானமான ஜாதிக்கட்டுமுறையில் புனிதமாக்குங்கள் மற்றவர்களோடு ஒத்துழைக்கவாருங்கள். வீணே பேசினுல்மட்டும் பிரயோஜனமில்லை. பகவான் முன்னிலையில் பாவியென்ற நாமம்படையாமல் மதுவை விலக்கவேண்டிய கடமையும், நாடார் ஜாதியின்முன்னேற்றமும் கௌரவமட்டுமல்ல, பாண்டியநாட்டின் சுதந்திரமும் உங்கள் கையில்தானிருக்கிற தென்பதை மறக்கவேண்டாம். மகாஜன சங்கத்திற்கு உங்கள் ஒத்தாசை ஒவ்வொரு நிமிஷமும் தேவையிருப்பதோடு இப்போது செய்யவேண்டிய வேலையோ அவசரமும் அவசியமுமாயிருக்கிறது. நீங்கள் தாமதப்படும் ஒவ்வொரு நாளும் நாடார் ஜாதியின் முன்னேற்றத்தை ஒருவருஷம் ஒத்திவைக்கிறது. அப்படிச் சுணங்குவதற்கு நீங்கள் காரண பூதர்களாயிருக்க உங்களுக்குச் சம்மதமா? இல்லையானுல் இன்றே ஒழியுங்கள். தாமதப்படுவீர்களானுல் நாடார் ஜாதியின் முன்னேற்றத்தைச் சுணக்கினபாவம் உங்கள் தலையிலேயே விடியும் உங்கள் பின்சந்ததியார்களின் சாபத்திற்கு ஆளாகாதீர்கள் ஜாக்கிரதை!

மரமேறுந் தொழிலைவிட்டால் வேறு பிழைப்பில்லையென்றுசிலகாரியப்புலிகளும் இதரர்களும்பிதற்றுகிருர்கள். மனிதசுபாவ மறியாத அத்தகையவர் கூற்றையும் ஆராய்வோம்.

சுதந்திர தாஸன்.

---

உசிலம்பட்டியில்,

### நமதுமித்திரன்புதியபோஷகப்பிரபுகள்

பாங்கரும் மிராஸ்தாரும் ஸ்ரீபத்திரகாளிதேவி தேவஸ்தான மானேஜிங் கமிட்டி மெம்பருமான, ஸ்ரீமான்

### வ. அ. க. இலக்ஷ்மண நாடார்,

ஆயில், காட்டன் & ஜெனரல் மெர்ச்சண்ட், ஸ்ரீமான்

### கொ. க. பழனிக்குமாரு நாடார்.

குறிப்பு:—உசிலம்பட்டியில் இன்னும் இரண்டு நம்குல தனவந்தர்கள் நமது மித்திரன் போஷகப்பிரபுகளுக்கு பொருள்கொடுத்து உதவப்போவதாகவும் அதுவிபரத்திற்கு கூடியசீக்கிரம் கடிதம்எழுதுவதாகவும் நம்குலாபிமானியான மதுரையில் பிரபல பலசரக்கு வியாபாரி ஸ்ரீமான் பெ. ப. ம. பாண்டிய நாடாரவர்கள் நமக்கு தெரிவிக்கிருர். அக்கனவான் உசிலம்பட்டியில் க்ஷேமநிதி, போஷகநிதிக்கு நம்மோடிருந்துவருஷ்செய்பருமுமுயர்ச்சி எடுத்தநமது மித்திராபிமானி என்பதையும் குறிப்பிடுகிறேம். பத்திராதிபர்.

## ஹிந்து தேவஸ்தான தர்ம பரிபாலன மசோதா.

### மதுரையில் பொதுக் கூட்டம்.

(நமது நிருபரிடமிருந்து)

இம்மசோதாஹிந்து சமூகத்தினருக்கு நன்மைபயக்குமா என்பதைப்பற்றி ஆலோசித்து நன்மை பயக்குமென மெஜாரிட்டியார் அபிப்பிராயப்பட்டு அவ்விதம் தீர்மானித்தால் அத்தீர்மானத்தை இந்திய ராஜப் பிரதிநிதியவர்களுக் கறிவிக்க வேண்டி 27-5-23 ஞாயிற்றுக்கிழமைகாலை 8மணிக்கு மதுரை இம்பீரியல் சினிமாகட்டடத்தில்ஹிந்துமதஸ்தர்களின் கூட்டமொன்று திராவிடக்கட்சி தலைவராகிய உத்தமபாளையம் ஸ்ரீமான் சுப்பிரமணிய முதலியாரின் அக்கிராசனத்தின்கீழ் கூடிற்று சுமார் 150 பிரமுகர்கள்வரையும் கூடியிருந்தனர். ஸ்ரீமான் முதலியார் முதலாவதாக தமது முகவுரையில் டி மசோதாவை ஆதரித்து விரிவாகப்பேசி முடித்து மசோதாஹிந்து சமூகத்தினருக்கு நன்மை பயக்காதென்று அபிப்பிராயப்படுபவர்கள் தங்கள் மசோதாவின் எந்த அம்சம் கெட்டதென்பதை அறிவித்தால் அதற்குத்தக்க சமாதானம் சொல்லப்படுமென சொல்லிமுடித்தார் பெரியசாமி பிள்ளையென்ற ஒருவர் "சுமார் ஒன்றரை லக்ஷம் ஜனங்களுள்ள மதுரைமாநகரில் சுமார் 500 ஜனங்கள்கொண்ட இக்கூட்டத்தாருடைய அபிப்பிராயம்மாத்திரம் போதாது" என்றும் மசோதாவைப்பற்றி எல்லா ஜனங்களுக்கும் துண்டுப்பிரசுரங்களின்மூலமாய் தெளிவாய் எடுத்துச்சொல்லிவிட்டபிறகே இம்மாதிரி கூட்டம்வைப்பது உசிதம்" என்றும் "எனவே இக்கூட்டத்தை ஒத்திவைத்தால் மிகவும் நலம்" என்றும் பேசிமுடித்தார். அவருடைய பிரேரணையை ரெங்கசாமி ஐயங்காரென்ற ஒருவர் தாம் ஆமோதிப்பதாகச் சொன்னுர். அக்கிராசனரும் ஸ்ரீமான் ஆர். எஸ். நாயுடுகாரும் ஸ்ரீமான் துரைராஜ் பிள்ளையும் மீட்டிங்கை ஒத்திப்போடுவது உசிதமல்லவென்றும் இந்த மீட்டிங்கை நடத்திஅதன்முடிவான தீர்மானத்தை அறிவதேநலம் என்றும் சொன்னுர்கள்: இப்போது அங்குவந்திருந்தவர்களில் சிலர் கூடாதுகூடாது என்று சத்தமிட்டனர். முடிவில் பிரேரணையானது ஓட்டுக்குவிடப்பட்டது. 72 ஓட்டுகள் சாதகமாகவும், 47 ஓட்டுகள் பாதகமாகவும் செய்யப்பட்டன. ஓட்டு எண்ணங்களிலும் தாமதமாயிற்று. பிறகு இரண்டு பிராமணர்களும் ஒரு நாயுடுவும் மற்றும் அநேகரும் மசோதாவானது ஹிந்து சமூகத்தினருக்குத் தீங்குசெய்யும் என்பதை விரிவாய் எடுத்து வாதித்தனர். முடிவில் தீர்மான ஓட்டுக்கு விடஆரம்பிக்க சில ஜனங்கள் சத்தமும் இரைச்சலும் கைதட்டுதலும் செய்தபடியால் அக்கிராசனர் தமது அதிகாரத்தைக்கொண்டு பகல் 12-30 மணிக்கு கூட்டத்தைக் கலைத்துவிட்டார்.

### நாடார்குல மித்திரன் க்ஷேமநிதி.

உசிலம்பட்டி.

| | |
|---|---|
| வெ. பொன்னப்ப நாடார் | ரூ 5 |
| ஆ. இராமஸாமி நாடார் | ரூ 2 |
| சீ. பழனியப்ப நாடார் | ரூ 2 |
| ச. சுந்தரப்பன் | ரூ 1 |
| பெ. இராஜமணி | ரூ 1 |
| பெ. வடிவேல் நாடார் | ரூ 3 |
| நா. அடைக்கலம்காத்த நாடார் | ரூ 3 |
| இ. ப. மாசாண நாடார் | ரூ 3 |
| ச. சொ. தா னியப்ப நாடார் | ரூ 2 |
| கொ. க. சீனியப்ப நாடார் | ரூ 2 |
| கி. பழனிச்சாமி நாடார் | ரூ 2 |
| பெ. அருளப்ப நாடார் | ரூ 3 |
| மா. சி. நாராயண நாடார் | ரூ 3 |
| பெ. சு. சங்கரலிங்க நாடார் | ரூ 2 |
| கொ. ஆ. அடைக்கலங்காத்தநாடார் | ரூ 2 |
| மா. சீ. காளியப்ப நாடார் | ரூ 1 |

### பினங்கு முதலிய அந்நிய நாட்டுச்சந்தா நேயர்களுக்கு ஓர் அறிக்கை.

பினங்கு. கோலாலம்பூர், சிங்கப்பூர், மலாக்கா, ஈப்போமுதலிய பிரதேசங்களிலுள்ள நமது சந்தா நேயர்கள் தங்களுடைய நான்காவது ஆண்டு சந்தாத் தொகையை மணியார்டரில்அனுப்பிவைக்கும்படியாய் கேட்டுக்கொள்ளுகிறேம். ஜலப்பிரதேசங்களுக்கு வி. பி. செலவு இரண்டு மடங்கு அதிகமாவதோடு சரியானகாலத்தில் கிடைக்குமென்பதும் சந்தேகந்தான். ஆகையால் நமது மித்திராபிமானிகள் தங்கள் சந்தாத் தொகையை உடனே மணியார்டர் செய்யும்படி வேண்டுகிறேம்.

மானேஜர்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

# சமத்துவம்.

சாங்கிரஸ் பஜார்

(முன் தொடர்ச்சி)

இப்போழுதில் பிரட்டிஷ் ஏப்பார் ருக்கு கோலாகிய பொலாரிகளா தி லகர் கொடுத்த துடபேர் பிரகாத்தை இந்திய தேச தலைவர்களிடம், நாடார் சொற்றதல்பேர்வரும் விஷயம் முக்கியமானது.

"இந்தியாவை ஞாபகத்தில் வையுங்கள். உலகத்தில் ஐந்திலொரு பங்கு ஜனத்தொகைகொண்ட இந்தியாவை சொற்பதொகையினரான பிரிட்டிஷ் அதிகாரவர்க்கத்தார் ஆண்டுவருகிறார்கள். சைபீரியாவையும், பெரூஷியா, ஜெர்மனியா, போலண்டு, ஜெக்கோஸ்லேவியா, யூகோஸ்லேவியா தேசங்களுக்கு மட்டுமல்ல, இவ்விடம் அமெரிக்கா, ஆப்ரிக்கா, தேசங்களுக்கும் சுதந்திரம் கூடக் கொடுக்கிறீர்கள். இந்த யுத்தத்தில் தன் சக்திக்குமீறி பணத்தையும் ஏராளமான உயிரையும் கொடுத்த இந்தியாவுக்கு எப்படி? எதிரிகளுக்குக் கொடுக்கும் சுதந்திரம்கூட இந்தியாவுக்குப் பிரிட்டிஷார் கொடுக்கமாட்டார்களா? இராஜ பக்தியுள்ள இந்தியாவை மிதித்து தற்போதைய நிலை அப்படியே தாக்க மட்டும்படியா விடுவார்கள்? உலகத்தில் ஐந்திலொரு பங்கு ஜனத்தொகையுள்ள இந்தியாவுக்கு சுயேச்சையில்லாமல் உலகத்தின் சுயேச்சை நிலைக்குமா? ஒரு நாளும் முடியாது சத்தியம்."

நாடார்:—சகோதரர்களே! நம் தேசத் தலைவர் தேசத்தின் உரிமையை எவ்வளவு வற்புறுத்திச் சொல்லியிருக்கிறார். இதைப்பார்த்த ஒவ்வொரு இந்தியரும் தங்கள் தேசத்தின் உண்மையான அபிப்பிராயமென்று சொன்னாலும் இந்திய அதிகாரவர்க்கமும் சுயகாரியப் புலிகளான சில பிரிட்டிஷாரும் இது புரட்சியை உண்டுபண்ணுவோர் கூற்றென்றும் இந்தியாவில் படிப்படியாய்த்தான் சுயராஜ்யம் ஏற்பட வேணுமென்று சொல்லும்போது உண்மை தேசப் பக்தர்களின் மனம் எவ்வளவு புண்படுகிறது.

மஹாராஷ்டிர தலைவர்:— சந்தேகமென்ன. அப்பேர்ப்பட்ட மனப்போக்குள்ளவர்களை தேசியவிஷயத்தில் கொடிய சத்துருக்களென்றே பாவிக்கிறோம். அவர்கள் கூற்றை மறுத்து சுயராஜ்யமடைய எதையும்தியாகம் செய்ய தயாராயிருக்கிறோம்.

நாடார்:—உண்மைதான்: தமிழ்நாட்டில் அத்தகைய தேசியஉணர்ச்சியின்றி ஜாதிய காற்று பலமாய் வீசிக்கொண்டிருக்கிறது அதனால் தான் நாடார்கள் குறை நீங்கினபாடில்லை.

வங்காளத் தலைவர்:—தேசிய வேலையை பலமாய் நடத்தவேண்டு மென்பது தங்கள் விருப்பம் போலும்!

நாடார்—ஆமாம்!தேசியவெள்ளம் பெருக்கெடுத்து ஓடினால் ஜாதிப் குன்றுகுழிகளெல்லாம் மறைந்துவிடும்.

பஞ்சாப் தலைவர்:—இது விஷயத்தில், தங்கள்ஜாதியார் ஒத்துழைப்பார்களென்று நம்புகிறீர்களா ?

நாடார்:— இதற்கு நானென்ன பதில் சொல்லுவது. நாடார்கள் தேசிய விஷயத்தில் அக்கரையுள்ளவர்களென்று முன்னமே சொல்லிவிட்டேன். தங்கள்குறை நீங்கினால் என்னைப்போல் (இதர ஜாதியார்களைவிட) அநேகம்பேர் தேசியவிஷயத்தில் அக்கரை காட்டுவார்களென்றுமட்டும் இதுசமயம் சொல்லலாம். அப்புறம் எல்லாம் தேசப்போக்கைப் பொருத்தது. ஆனதால் இந்தியாவின் சுதந்தரத்தை விரும்பும் தமிழர்கள் ஜாதிய சபைகளை ஒன்று சேர்த்து ஒவ்வொரு ஜாதிக்கு முள்ள குறைகளை நீக்கவிட தீவிரமாய் வேலைசெய்ய வேண்டும். இனி லோகமான்ய திலகரின் வாக்கியத்தை எடுத்துக் கொள்வோம், "இந்தியாவை ஞாபகத்தில் வையுங்கள் உலகத்தில் ஐந்திலொருபங்கு ஜனத் தொகைகொண்ட இந்தியாவை சொற்பத்தொகையினரான பிரிட்டிஷ் அதிகாரவர்க்கத்தார் ஆண்டு வருகிறார்கள்." தமிழ்நாடுசுதந்திரமடைய வேண்டுமானால், அடையும் சுதந்திரம் நிலைத்திருக்கவேண்டுமானால், ஹிந்துமதத்தின் பெருமைவிளங்கவேண்டுமானால், தமிழர்களின் மானம் காப்பாற்றப்படவேண்டுமானால், ஹே! தமிழர்களே! பாண்டியநாட்டு ஹிந்துக்களே! நாடார்களை ஞாபகத்தில் வையுங்கள் பாண்டிய நாட்டில் அதிக ஜனத்தொகையுள்ள இரண்டு ஜாதிகளில் ஒரு ஜாதியாரும் தேசமுன்னேற்றத்திற்கு அவசியமான கல்வி வியாபாரம், விவசாயம், கைத்தொழில், ஒற்றுமையும் ஒருங்கே அமையப்பெற்றவர்களும், இதே பாண்டியநாட்டை முன்னால் ஆண்ட அரசர்களின் பரம்பரையுமான நாடார்களை கேவலம் சுயநலத்தையும் அற்பபுத்தியும் குறுகிய நோக்கமும் துவேஷ எண்ணமுமே உருவெடுத்த சில ஜாதித் தலைவர்கள் சிலர் தங்களோடு சிலரையும் சேர்த்துக்கொண்டு நாடார்களுக்கு பாண்டிய நாட்டில் ஆலய சுதந்திரம் கிடைத்தால் வானம் இடிந்து இவர்கள் தலையில் விழுந்துவிடுமென்று சொல்லித்திரிகிறார்கள். பாண்டிய நாட்டைத் தவிர மற்ற ஆலயங்களில் நாடார்கள் போய் வரும்பொது அங்குள்ள ஹிந்துமதம் கெட்டுப்போகாமல் கௌரமாயிருப்பதை அறியாது கிணற்றுத்தவளைகளாக கத்தித்திரிகிறார்கள். இந்திய அதிகார வர்க்கத்தால் எவ்வளவு கஷ்டமும்அகௌரவமும் ஏற்படுகிறதென்று தேசீயவாதிகள் நினைக்கின்றார்களோ அதேபோல் இந்த அற்பபுத்தியுள்ள சிலரால் தங்களுக்குக்கஷ்டமும் கௌரவமும் தேசத்திற்கும் மதத்திற்கும் ஒற்றுமைக்குறைவும்ஏற்படுகிறதென்றுநாடார்கள்உண்மையாய் நம்புகிறார்கள். மற்றவைகளை இனிமேல் சொல்லுகிறேன்.(இன்னும் வரும்)

சமத்துவப் பிரியன்.

# செய்தித் திரட்டு.

## ஆவரைக்குளம்.

இவ்வூரில் 'க்ஷத்திரிய நாடார் பரிபாலன சங்கம்' என்று ஏற்பட்டநாள்முதல் இக்கிராமவாசிகளுக்குள் ஒற்றுமை அதிகமாய் வேரூன்றி இச்சங்கத்தார் மேற்படி சங்கம் ஸ்தாபிக்கப்பட்ட சில காலத்திற்குள் கோர்ட்டுக்கும்போய் வீண்விரையஞ் செய்யும் தொழிலை அறவேஒழித்து தாங்களே தங்களுக்குள் முடித்துக்கொள்வது மெச்சத்தக்கது. இவர்களின் ஐக்கியத்தையும் ஒற்றுமையும் இதரஜாதியாரான சிலர் பார்த்து சங்கத்தில் அங்கத்தினராய்ச்சேரவேண்டுமென்று நம்மவர்களில் சிலருக்கு சம்மதித்து கூறுவதாகவும் தெரிகிறது. பிறரின் துர்போதனையை கருதாது நம்மவர் யாவரும் ஏகோபித்து ஒன்றுபட்டு ஒற்றுமைக்கு மேற்றமான வரையறை அங்கமே பாதுகாத்துக்கொள்ளவேண்டும். மேற்படி சங்கத்தின் 4-வது மாதாந்தக்கூட்டம் ஸ்ரீமான்களான அ. ஆறுமுகத்து நாடார்.பா. துரைச்சாமி நாடாரவர்களின் அக்கிராசனத்தின் கீழ்வெகு விமரிசையாக நடைபெற்றது. பெரியோரும் சிறியோருமாக சுமார் 75 பேர் விஜயஞ்செய்து கூட்டத்தைச் சிறப்பித்தனர். அவ்வமயம் ஸ்ரீ பா. வேதநாயக நாடாரவர்கள் 'நமது நிலைமை' என்பதைப்பற்றி அரிய உபந்யாசஞ்செய்தனர். என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

• • •

## தேவாரம்.

இவ்வூர் பேட்டைஒன்றுஇருக்கிறது. அதில் சுமார் வருஷம் 1-க்கு மகமை வசூலானால் ரூ 1000க்கு ஆயிரத்துக்கு குறையாமல் வசூலாகும். அதுவும் ஒற்றுமைக் குறைவால் வசூலாகாமலும் கட்டடவேலைநடவாமலும்இந்த10 வருஷமாக 10000 பதினாயிரம் ரூபாய் நஷ்டமாக இருந்து கொண்டிருக்கிறது. இது விஷயத்தை "நாடார் மகாஜன சங்கம்" கவனித்து நாளையே பிரசாரகர்களை இவ் வட்டகைகளுக்கு அனுப்புவார்கள் என்று எதிர் பார்க்கப்படுகிறது என்று ஸ்ரீமான் இ. மா. சங்கரலிங்கம் எழுதுகிறார்.

• • •

## பேரையூர்.

பால்ய சங்க அபிமானிகளே ! இந் நவீனநாகரீககாலத்தில் நம்முன்னோர்கள் வகித்துவந்த உயர்நிலைமையடைய ஆவலுள்ளவர்களாகயிருக்கும்போது பேரையூரில் நம்குலத்தவர்கள் வீடு சுமார் 130 வரை இருந்தும், அங்கு ஆறுமாதகாலமாய் நடைபெற்றுவந்த பால்ய நாடார் சங்கம் நின்றுவிட்டதாக மித்திரன் மூலமாய் அறிந்த நான் விசனிக்காமல் இருக்கமுடியவில்லை. எண்ணித் துணிவது கருமம் துணிந்தபின் எண்ணுவதிழுக்கு என்ற வாக்கியத்தைக்கவனித்து இனியாகிலும் நம் பாலியர்கள் கல்வி அபிவிருத்திக்கேற்ற சங்கத்தை உற்சாகத்துடன் நடைபெற செய்யும்படி கனம் பால்யநாடார்களுக்கு என்முழு வந்தனத்தை பன்முறைச் செலுத்துவதாக ஸ்ரீமான் கா. மு. பெரியசாமி நாடார் இரங்கூனிலிருந்து எழுதுகிறார்.

• • •

## திருட்டு.

திருவிதாங்கூர் சமஸ்தானம் அழகப்பபுரத்திலுள்ள சில நாடார்குல மாதர்கள் வடக்கன்குளம் தனது பந்துக்கள் வீட்டுக்குப்போய் திரும்பி 6-5-23 ல் கன்னியாகுமரி யாத்திரைரோட்டு பாதையான மங்கமாசாலை வழியாய் பகல் 11 மணி சுமாருக்கு வரும்போது பணகுடிக்கும் தெற்கு கருங்குளத்துக்கும் இரண்டுமைலுக் மத்தியில்பழவூர் பிள்ளைமார்ஒருவன்ஓர் மாதின் காதில்அணிந்திருந்த சுமார் நூறு ரூபாய் நகைகளையும் திருடிக்கொண்டு ஓடிப்போய்விட்டான்.அப்பால்இராதாபுரம்போலீஸ் சப்இன்ஸ்பெக்டரவர்கள் மேற்படி செய்தியை விசாரித்து திருடனை அரஸ்டு செய்து கொண்டு போயிருக்கிறார்கள் கொள்ளைத்தலைவர் செர்புலிங்க நாடார் பேரைவைத்துக்கொண்டு சகல ஜாதியார்களும் பலவித களவுகள் செய்யத்துணிந்துவிட்டது விநோதமான சங்கதியாய் இருக்கிறதுஎன்று சி. நாராயண நாடார் எழுதுகிறார்.

• • •

## தண்ணீர்க் கஷ்டம்.

திருநெல்வேலி ஜில்லா நாங்குநேரித் தாலுகா திசையன்விளை என்னும்ஊரில் பிரதி வெள்ளிக்கிழமை தோறும் கூடும் பிரமாண்டமான சந்தைக்கு ஆயிரக்கணக்கான ஜனங்கள் வந்து சகல வியாபாரங்களையும் வாங்குவதோ, விற்பதோ செய்கிறார்கள். இத்தனை ஜனங்களும் ஒருங்கே கூடும்இவ்விடத்தில் சுத்த ஜலத்திற்கு ஜனங்கள் படும்துயரோ வர்ணிக்க முடியாது. அதிகமாக புதிதாய் பல கிணறுகள்வெட்டி வருஷத்தில் ஆயிரக்கணக்காய் ரூபாய் வரும்படிபார்க்கும் கவர்ன்மெண்டார் தண்ணீர் சப்ளை செய்ய மதியில்லாமல் போனாலும் அவடம் சுத்தமில்லாதிருக்கும் கிணற்றையாவது சீர்படுத்தி பொதுஜனங்களின் அன்பை பெருமாறு வருந்தி ஸ்ரீமான் கு. அ. வீரகுமார் நாடார் எழுதுகிறார்.

---

# ஜெம்புலிங்க நாடார்.

(நமது சொந்த நிருபரிடமிருந்து)

ஜெம்புலிங்க நாடாரின் சம்பந்தமாக நமது மித்திரனும் நாங்குநேரித்தாலுகா நாடார்களின் தற்கால நிலைமையில் தனது கடமையை செய்யவேண்டிய அவசியம் ஏற்படுகின்றமையால் சிறிது கவனிப்பாம். தேசப் பொதுப் பத்திரிக்கைகளுக்கு செய்திகள் தெரிவிக்கும் நிருபநேயர்கள் ஜெம்புலிங்க நாடார் வம்பானவேலைகள் செய்துவருகிறாரென்றும் நாங்குநேரிதாலுகாவே நாசமாய்ப் போகுமென்றும் தங்களது பேனாக்களை வெகு அழுத்தமாய் பிரயோகித்து நாட்டில் பயத்தையும் சோழந்தனத்தையும் உண்டுபண்ணிவிட்டார்கள். ஆனால் குடிகளை சேமத்தோடு பாதுகாக்க ஏற்பட்ட போலீஸ்புலிகள் துவேஷவெறி கொண்டு நாடார்களுக்குபுரிந்த இடுக்கண்களை நாடார் அறிய வெளிப்படுத்தாமல் இருந்தது ஆச்சரியத்திலும் ஆச்சரியமே.

மகாத்மாகாந்தி திருநெல்வேலியில் நாடார்களைப்பற்றி கூறிய நல்லபிப்பிராயத்தை மறைத்த நிருபநேயர்களைதவால் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை. 'விஷயத் திருட்டு வெளிவந்து விட்டது'என்று நமது "மித்திரன்" நிருபம் தாங்கி, வெளிவந்ததற் கொப்ப தற்பொழுதும் ஜெம்புலிங்கநாடார் சம்பந்தமாய் போலீஸ்கீழ்தர உத்தியோகஸ்தர்களின் திருட்டுச்செயலை நாடார்களும், நாட்டார்களும் அறியவெளியிடுவது அவசியமாக இருக்கிறது. காருண்யம் மிகுந்த கவர்ன்மெண்டாரவர்களும், திருநெல்வேலி ஜில்லாக் கலெக்டரவர்களும் கவனஞ் செலுத்தவேண்டும்.

ஜெம்புலிங்க நாடார் மூன்றும் முறையும் ஜில்லா ஜெயிலினின்று வெளியேறி மிருகேந்திரன் எவ்வாறு காடுகளில் அச்சமில்லாமல் வாழ்ந்து வருவானோ, அவ்வாறு ஜெம்புலிங்கநாடாரும் காடுகளையும் மலைகளையும் தமதாக்கிக் கொண்டு யாதொரு அச்சமில்லாமல் வாழ்ந்துவருகிறாரென்ற வதந்தி பிராணிகளால் ஆங்காங்கு காணப்பட்டு சொல்லப்படுகிறது. மேலும் அடிக்கடி கிராமங்களுக்குட்சென்று பல்லேர்மத்தியில் தைரியமாய்நின்று பகற்காலத்தில் கொள்ளை செய்கிறாரென்று சொல்லப்படுகிறது. நாள அமே மாதம் முதலாம் தேதிக்குப் பின்னர் வடக்கன்குளம் போலீஸைச் சேர்ந்த பக்கக்கிராமங்களில்கொள்ளையடித்ததாகவும் இராதாபுரம்பக்கமாகவிலாத்திகுளம்கொள்ளையடிக்கப் பட்ட தாகவும், திசையன்விளையின்பக்கமாக நம்பிகுறிச்சி என்ற கிராமத்தில் ஓர் முதலியார் வீட்டில் 1500 ரூபாய் வரையிலும் கொள்ளை யடிக்கப்பட்டதாகவும் வதந்தி உலாவுகிறது.

மித்திரன் வாசக நேயர்களே! இதில் கவனிக்கவேண்டிய தொன்றுண்டு. இராதாபுரத்தைச்சார்ந்தசிலாத்தி குளத்தில் கொள்ளை பகலில் நடத்தப்பட்டதாகவும் மேற்படி யூரின் பெரும்பான்மையோர்களான செட்டியார்கள் உடனேஇராதாபுரம்போலீஸ்டேஷனுக்குத்தெரிவித்ததாகவும்,போலீஸ்புலிகள் இதோ வருகிறோம் வருகிறோம் என்று, வீணாகாலங்கடத்தி இரவு 6 மணிக்கு மேற்படி யூருக்குச்சென்று ஜெம்புலிங்க நாடார் போய்விட்டாரா? இருக்கிறாரா? என்றவிஷயம் அறிவதற்காக ஊருக்கு வெளியில் இருந்துகொண்டு போய்விட்டார்களென்று அறிந்த பின் ஊருக்குள் நுழைந்தார்களாம். மேலும் மேற்படி ஜெம்புலிங்க நாடார் கொள்ளையடிப்பதெல்லாமென்றால் குடிகளின்கிஸ்திக்கணக்கின்படி தரவாரியாக கொடுக்கும்படிகேட்டு சவகாசமாகவே இருந்து வாங்கிப்போவது பழக்கம் என்று சொல்லப்படுகிறது. மேற்படி சிலாத்திகுளத்தில் மேற்கூறிய விதமாகவே பணம் வசூலிக்க காலங்கடத்திக்கொண்டு போலீஸ் ஸ்டேஷனுக்குத்தெரிவித்தார்களாம். ஆனால்போலீஸ் வீரரின் செய்கை மெச்சத்தக்கதேயிற்க.

இப்பாகங்களிலுள்ள பொதுஜனங்கள் மேற்படி விஷயத்தை முன்னிட்டும் இதைப் போன்ற பலசம்பவங்களை உத்தேசித்தும் போலீஸ் புலிகள்மீது சந்தேகங்கொண்டு அடியிற்கண்டவாறு பேசிக்கொள்ளுகிறார்கள்.

"அதாவது "ஜெம்புலிங்கம் கொள்ளைசெய்யும் பணங்களெல்லாம் எங்கே போகிறது. பணங்களைபோலீஸ்புலிகள்வாங்கிவயிறுபுடைக்கத் தின்றுகொழுத்து அலைகின்றார். இப்போதிருக்கும் ஸ்பெஷல் போலீஸ் கூட்டத்தை மாற்றி வேறே போலீஸ் கூட்டம் வந்தால் மட்டும் பிடிக்கக் கூடும்" என்றும் பேசுகிறார்கள்.

மேற்படி சிலாத்திகுளம் கொள்ளையிலிருந்து நாம் கவனிப்பது என்னவென்றால், தங்கள் உயிரை வெல்லமாக நினைத்த காரணமா ? அல்லது பணம் பெற்றுத் தின்னும் காரணமா ? போலீஸ்காரர்களுடன்தெரிவித்தும் போகாதது. கிற்க

நம்மவர்களை இந்தப் போலீஸ் காரர்கள் ஜெம்புலிங்க நாடாருக்கு சாப்பாடு கொடுத்தார்களென்றும், அன்னவரோடு பேசிக் கொண்டிருந்தார்களென்றும், துவேஷ வெறியால் அற்பத்தனமாக பொய்க்கேஸ்கள் உற்பத்தி செய்து தங்கள் பகையை தீர்க்க எண்ணுகின்றார்களே, சிலாத்திகுளத்தில் கொள்ளை கொடுத்த செட்டிமார்களையும் 1500 ரூபாய் கொடுத்த முதலியாரையும் எடக்கன்குளம் பக்கம் கொள்ளையடிக்கப்பட்ட செட்டியாரையும் சந்தேகிக்கவும் கூடாதோ ? அன்னவர்கள் ஜெம்புலிங்கநாடாரின் துப்பாக்கிக்கு பயந்து பணம்கொடுத்தார்கள். போலும் ! நாடார்களிடம் துப்பாக்கியை சாப்பாடுபோடச் செய்திருக்கக் கூடாதோ ? நாடார்கள் மட்டும் உடந்தையாயிருந்தார்கள் போலும் ! ஆ! போலீஸ் வீரர்களே ! உங்கள் அறிவே ! அறிவு !!

மேலும் நாடார்களிடம் உள்ள துப்பாக்கிகளை யெல்லால் இந்தப் போலீஸ் அதிகாரவர்க்கத்தினர் பிடுங்கி விட்டார்கள். இப்போது துப்பாக்கிக்கு அஞ்சி பகுதிப்பணம் செலுத்தும் மற்றவகுப்பினர்கள் துப்பாக்கிக்கு அஞ்சி தங்கள் துப்பாக்கிகளைகொடுக்கமாட்டார்களோ? காலில் விழுந்து நமஸ்காரம் செய்து கொடுப்பார்கள். ஆதலால் நாடார்களுடைய துப்பாக்கிகளை மட்டும் பிடுங்கக்காரணமென்ன ? உடந்தையாயிருக்கின்றார்களோ ? அந்தோ ! கொள்ளைக் கூட்டத் தலைவனுக்குஆதரவுகொடுப்பதும்நாடார்கள் அல்ல என்பதை காருண்ய கவர்ன்மெண்டாரவர்கள் கவனிக்க வேண்டும். திருநெல்வேலிஜில்லாக் கலெக்டரவர்கள் வேண்டுவன செய்ய வேண்டும்.

நாடார்களுக்கு இடுக்கண் விளைவிக்க எற்றசமயம் இது வென்று காத்து கொண்டிருக்கும் பரமதுவேஷிகள் அதிகார வர்க்கத்தில் நிறைந்து கிடப்பதால் திருநெல்வேலி ஜில்லாக் கலெக்டரவர்கள் இவ்விஷயமாக மிகுந்த கவனம் செலுத்தி நாடார்களுடையஇராஜவிசுவாசத்திற்கு பங்கம் வராமல் பாதுகாக்கவேண்டும்.

16-5-23ல் கள்ளிக்குளத்திற்குக் கீழ் ஓரமாக போலீஸார் ஜெம்புலிங்க நாடாரை பிடிப்பதற்காக தேடிவரும் சமயம் நாடார்களுக்கு சில இடுக்கண் கொடுத்திருக்கிறார்கள். கீழ்தர போலீஸ் உத்தியோகஸ்தர்கள் மிலேச்சத் தன்மையுள்ள மிருகஜாதிகளைபோலிராதபடி ஆறறிவு படைத்த மனிதவர்க்கத்தை சார்ந்தேயிருந்து இராஜவிசுவாசமுள்ள பிரஜைகளிடத்தில் அன்புடன் நடந்து கொண்டால் மிக்கநலம் என்பதையும் தெரிவிக்கிறோம்.

---

குல முன்னேற்றமே தன்னேற்றம்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection

# ரஸத்திரட்டு.

## கேலி செய்வார்களே!

உலகத்திலே மானிடராய்ப்பிறந்த சிலராகிய நாம் தன்னலமாகவோ குலோபகாரமாகவோ பொது ஜனோபகாரமாகவோ தேசோபகாரமாகவோ உலகோபகாரமாகவோ நன்மையதாகவேனும் தீமையதாகவேனும் ஏதாம் கொண்ட கொள்கைக்கும் நடக்கவேண்டிய ஒழுங்குக்கும் பொருந்த நினைப்புக்கும் எடுத்த தோரணைக்கும் மாறானதோர் வழியில் அறியாமையினாலோ உலகமாய்கை யென்னும் அலையால் மோசப்பட்டோ திரும்பும்போது இவ்வித வழியில் இறங்கிவிட்டாயே மனசாக்ஷிக்கு வழிமறித்து "இதென்னவெடுத்துக்கொண்டவேலைக்கு முற்றும் மாறாகச்செல்ல முன்வருகிறாய். உலகம் பழிக்காதா? ஜனங்கள் கேலிசெய்யார்களா? நினைப்பதொன்றும் சொல்வதொன்றும் செய்வதொன்றுமாயிருக்கிறதே" என்ற கேள்விகளை விடுகின்றன. ஆமாம் இதென்ன பிரமாதமென்று அலக்ஷியமாய் இவை மீறி நடப்பவர்களே அநேகராகின்றோம். இது படிப்பது இராமாயணம் இடிப்பது பெருமாள்கோவில் என்றகதையாகிறது. என்றாலும் இவ்விதம் நடப்பதால் காரியாம்சை காரியாம்சை என பேரிகை முழங்கும் இக்காலத்தில் பொதுஜனங்களிடமிருந்து நமக்குக்கிடைப்பது யாம் எதிர்பாராததோர் வசைமொழியேயாகும். ஆனால் இவ்வித வசைமொழியால் அடிபட்டதின் பின் தன்வழியைத் திருப்பிக்கொண்டு உலகம் ஒப்புமாறு நடந்துகொள்வது பத்திசாலிகளின் தன்மையெனினும் நாய்பேய் கஞ்சான் குஞ்சானும் சிறிக்க உலகம் பழிக்க அபகீர்த்திக்காளாகி ஒருசிறிதும் தன்வழியைத்திருப்பிக்கொள்ளாதகடையருக்குயாம் சொல்வது யாதோ தெரியவில்லை. இன்னும்தான் படித்தவரையில் ஒரு சிறிதேனும் நடந்து காட்டவேண்டுமென முன்வரும்போது அவர்களை யேசி இகழ்ந்துரைக்கும் குலாங்கர் அடையும் ப்ராக்கியமென்னவோ! ஈசனே அறிவான்.

## வீட்டுக்கோர் வாசற்படி.

கொடுமை! கொடுமை!! கலிகாலக்கொடுமை!!! யெனக்கதறும் இக்காலில் கலியுகத்திலவதரித்த மானிடர் யாவரும் முன்யுகங்களின் நடபடிக்கைக்கு முற்றும் மாறாகவே தற்போது நடக்கின்றனரென்பது உண்மை. இவ்வித நடத்தையில் இடமெடுத்துக்கொண்ட இல்லறவாசிகளின் இம்சையோ! நித்தம் வருத்தம் நித்தம் சண்டை நித்தம்கோபம் நித்தம் கஷ்டமடைவதே இயல்பாயிருக்கிறது. இவைகளுக்குப் பல காரணங்கள் இருப்பினும் மாமிமருமகள் போராட்டமே மரியாதைக்குறைச்சல். அப்பக்கம்பார்த்தால் பெற்றவள் இப்பக்கம்பார்த்தால் கொண்டவள். இரண்டுக்கும் இடையில் கொண்டவன் சமத்காரமாய் நடந்தாலாச்சுது இல்லையேல் நித்தம் மயிர்பிடிதான். அப்போ தம்பிபாடு திண்டாட்டந்தான். அதற்குத்தான் மேலோர் பெண்களைபேயென விலக்கினர்போலும்! இக்கொண்டாட்டம்ஒருவர்இருவரோடு நில்லாமல் வீட்டுக்கோர் வாசற்படி தவறாமலிருப்பது போல அநேகமாக எங்குமே கொண்டாடப்படுகிறது. இவ் வைபவம் ஏகமாயிருப்பதை நோக்கினால் மகனும் மருமகளும் தங்கள் பெற்றோர் முன்னிலையிலேயே இல்லறத்தை தனித்திருந்து நடத்திக்கொள்ளும் பொருட்டே இவ்விதம் பிரமன்தன் வேலைத்திறத்தை ஒளித்திருக்கிற சிருஷ்டி மர்மத்தை மெச்சவேண்டியதாகிறது.

## கட்டின வீட்டிற்கு வக்கணை.

புதிதாக ஒருவன் தன்சக்திக்குத்தகுந்தவாறு தன் அத்தியந்த நண்பர்களின் ஆலோசனையின் மேல் ஒரு கட்டடம் நிர்மாணித்தால் அவ்வழியே வருவோரும் போவோரும்அதைப்பார்த்துஇதை இவ்விதம் விட்டிருந்தால் நலமாயிருக்கும் அதை அவ்விதம் கட்டியிருந்தால் கூட இரண்டுதானே செல்லுமென யாதேனுமொரு குறையைக்காட்டிக் கடக்கின்றனர்- இப்படியே குறையின்மேல் குறைகள் வந்து குவிகிறதிற்கு இடங்கொடாமல் தன் சக்தியை அறிந்து நடந்துகொள்வதே உலகஞான மதிந்த ஸ்திரபுத்தி யுள்ளவனெனப்படுவான். இவ்விதக் குறைகூறவந்த உத்தமர்கள் சும்மா ஏதோபார்த்தோம், எதையோ சொன்னோம் என்று வெளிப்பூச்சுக்கு மயங்குகிற ஆசாமிகளா யிருக்கின்றோமே தவிர அவன் சக்திஎன்ன நிலைமை என்ன கருத்தென்ன வென்பதை உய்த்துணராது கண்டதே காக்ஷி கொண்டதே கோலமெனக் கொள்பவர்களாயிருக்கிறோம். அவ்விதமே நாளுக்கொருகவீனம் நிமிஷத்திற்கொரு நாகரீகம் தலைதூக்கும் இக்காலில் ஒருவர்க்கொருவர் கொண்டுள்ள கருத்தை உணராது வேடிக்கைக்கேனும் தமாஷாகவேனும் பிறர்தன்னை இவன் நல்லாளகண்டனென மெச்சும்பொருட்டேனும் அப்பா இவன் பேச்சில் வலுபயல் எனப் பெயர் பெறவேனும் ஒருவர்க்கொருவர் மனம் புண்படத் தன்னையறியாது குறைகூறிக்கொள்ளுகிறோம். வழக்குமுற்றினால் வாயடியாகி கையடியாகி தடியடிக்கும் தலையசைக்கிறது. இவ்விதம்மேற்புல்லே மேயும் மேதாவிகள் தங்கள் மனதை மழுக்கிக் கொள்வதல்லாமல் எவ்விஷயத்திலும் ஊன்றிப்பார்க்கும் சக்தியில்லாதவனாய்எவ்விடத்திலும் தலைதூக்கமாட்டாதவனாக்கிக்கொள்ளுகிறோம். G. A. Nadar

## கவர்ன்மெண்டின் நன் நம்பிக்கை.

(நமது நிருபரிடமிருந்து)

கொன்னூர் தலைவருகிய செம்புலிங்க நாடாருக்கு உடந்தையாயிருந்ததாகவும் உடந்தையாயிருப்பதாகவும் கூடன்குளம், செட்டிகுளம், பணகுடியூர், கல்லான்குளம் ஆகிய கிராமத்தில் கிராமமுனிசிப் வேலைபார்க்கு வந்த நம் நாடார்களை சஸ்பெண்ட் செய்து வைத்திருந்ததைத் தாம் செய்தது திரும்பி வேலையைக்கொடுக்க விடவும் 12-5-23ல் பாளையங்கோட்டை டிவிஷனல் ஆபீஸர் ரூமில் செம்புலிங்க நாடார் சம்பந்தமாகவுள்ள இருகேஸ்களை [illegible] செம்புலிங்க நாடாருக்கு ஒத்தாசை செய்யாதிருக்கும்படியும் [illegible] நம்முடைய முகாமில் நான்குநேரி தாலூகா நாடார்களைக்கூட்டி ஓர் பொதுக்கூட்டம் நடத்தவேண்டுமாய் திருநெல்வேலி பாலம் மகா-ள-ள-ஸ்ரீ வி. சுப்பிரமணிய நாடார் அவர்கள் பி. ஏ. பி எல்; மூலமாய் எல்லாக் கிராமங்களுக்கும் நோட்டீஸ் அனுப்பப்பட்டிருந்தது. 12-5-23 ல் நான்குநேரித் தாலூகாவிலுள்ள சில கிராமங்களிலுள்ள சுமார் 50 பேர்மட்டும் வந்திருந்தார்கள். ஸ்ரீமான் வி. சுப்பிரமணிய நாடார் அவர்கள் பகல் 12மணிக்கு வந்து சேர்ந்தார்கள். ஆனால் டிவிஷனல் ஆபீஸர் தாம் கொடுத்த உத்தரவுப் பிரகாரம் வரவில்லையாதலால் மகாஜனங்கள் மனவருத்தத்துடன் திரும்பலானார்கள்.

நான்குநேரித் தாலூகா நாடார் மகாஜன கான்பரென்ஸில் தீர்மானிக்கப்பட்டு சென்னை கவர்ன்மெண்டாரவர்களுக்கும் ஜில்லாக் கலெக்டரவர்களுக்கும் தந்திமூலம் தெரிவிக்கப்பட்ட ஜெம்புலிங்க நாடார் சம்பந்தமாகவுள்ள தீர்மானத்தின் பலனை கைமேல் கண்டுகொண்டோம்.

சென்னை கவர்ன்மெண்டாரவர்கள் நாடார் மகாஜனங்களுக்கு யாதொரு துன்பமும் கொடுக்காமல் அவர்களோடு சமாதானமாய் ஒத்துழைக்க உத்தரவு கொடுத்திருப்பதாய்த் தெரிகிறது.

நான்குநேரித் தாலூகா நாடார் மகாஜனங்கள் சமாதானத்தோடும் மனோஎழுச்சியோடும் சங்கத்தின் பேரிலும் "நமது மித்திரன்" பேரிலும் மிகுந்த பற்றுள்ளவர்களாய் இருக்கிறார்கள் என்பதை தெரிவிக்கவிருப்புகின்றேன்.

சேர்மாதேவி டிவிஷனல் ஆபீஸர் அவர்கள் கவர்ன்மெண்டார் மனப்பான்மையன்படியும் நாடார் மகாஜனங்களின் கோரிக்கைப்பிரகாரம் நடந்து கொள்ளுவார்களென்று எதிர் பார்க்கிறோம்.

## பணகுடி.

திருநெல்வேலியிலிருந்து தெற்கே சுமார் 32 மைலுக்கப்பால் நாகர்கோவில் போகும் ரோட்டின்பேரில்உள்ளது. ஷை ஊர் நம்மவர்கள் சுமார் 300 தலைக்கட்டுகள் வரையும் உள. ஷை ஊரில் "நாடார் க்ஷத்திரிய ஐக்கிய சங்கம்" என்ற நாமத்துடன் ஓர் சபை நிலவுகின்றது. ஷை சங்கத்திற்கு முக்கியஸ்தர் பலர்உத்தியோகம்வகித்திருக்கிறார்கள்.

நம்மவர்களுக்குள் ஏற்படும் வழக்குகளை ஷை சங்க உத்தியோகஸ்தர்கள் பஞ்சாயத்தார்களாக விளங்கி தீர்த்துவிடும் பான்மை மிகவும் மெச்சத் தகுந்தது.

2-5-23 ல் இரவு 9-மணிக்கு அவ்விடம் விஜயம்செய்திருந்த கள்ளிகுளம் போஸ்ட்மாஸ்டர் ஸ்ரீமான் யாக்கோபு நாடாரவர்களின் தலைமையின்கீழ் கூடிய பஞ்சாயத்தார்கள் ஷை ஊர் ஏ. ஞானப்பிரகாச நாடாருக்கும் ஞா. சூசைமரிய நாடாருக்கும் உண்டான மனஸ்தாபத்தை உபயவாதிகளிடமும் சாட்சிகளிடமும் வாக்குமூலம்வாங்கி ஒழுங்குபண்ணி ராசிசெய்து வைத்தார்கள். உபயவாதிகளும் வெற்றிலை பரிமாறி ஒருவருக்கொருவர் நேச மனப்பான்மை யடைந்தார்கள். இம்மாதிரி பழைய வழக்கத்தை நம்மவர்கள் கவனிக்குமாறுவேண்டுகிறோம்.

நிற்க, சுமார் 2 வருஷங்களுக்கு முன்னதாக மகிமைதரும் மகமையும் நடைபெற்றதாகவும். இடையில் நின்றதாகவும் தெரிகிறது. மகமையால் ஏற்படும் நன்மைகளை நாமறிந்ததே. ஆகையால் இடையில்நின்றதை ஈடேற்றுமாறு பணகுடி நாடார்களும் "க்ஷத்திரிய நாடார் ஐக்கிய சங்கத்" தாரும் முன்வரவேண்டும்.

## பர்மா வர்த்தமானம்.

(நமது நிருபரிடமிருந்து.)

### வேலை நிறுத்தம்.

பர்மா மண்ணெண்ணெய் கம்பேனி சிரியம் என்னுமிடத்தில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கிறது. அவ்விடமிருந்து எண்ணெய் எடுக்கப்பட்டு இரங்கூனை அடுத்துள்ள கம்பேனிகட்டடத்திற்கு குழாய் மூலமாய் கொண்டுவரப்படுகிறது. சுமார் 50 மைல் தூரமென்று சொல்லப்படுகிறது. 19-3-23 திங்கட்கிழமை 4000 பர்மியத் தொழிலாளர்கள் சனூஞ்சாங் என்னுமிடத்தில் [illegible] கம்பேனியிலிருந்து வேலை நிறுத்தம் செய்தனர். காரணம் தொழிலாளர்களுக்கும் கம்பேனி யசமான்களுக்கும் ஏற்கனவே சில விஷயங்களில் தகராறு ஏற்பட்டிருந்திருக்கிறது. அதனால் அவர்களுக்கு சர்க்கார் [illegible] தொடங்கினார்கள். தொழிலாளர் ஆட்சேபனை செய்தும் கேட்கவில்லை. முன் எச்சரிக்கை செய்யாமல் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்துவிட்டபடியால் மறுபடியும் வேலைக்கு வந்தாலன்றி தொழிலாளர் கஷ்டங்களை விசாரிக்க முடியாதென்று கம்பேனிக்காரர் கூறுகின்றார்கள். நிலைமை அமைதியாயும் முக்கியமான சிலவேலைகள் மட்டும் நடைபெற்று வருகிறது.

### ஆலோசனைக் கமிட்டி,

இந்திய கவர்ன்மெண்டின் வரவுசெலவு திட்டமறிந்துசெலவைக்குறைக்க ஆலோசனை கூற லார்ட் இஞ்சிகேப் என்னும் தலைமைகொண்ட ஓர் கமிட்டி இங்கிலாந்திலிருந்து தேசம்விட்டு தேசம் வந்து சிபார்சு செய்துவிட்டது. பர்மா மாகாணத்தில் ஸர் ஹார்ட்கோட்பட்லர் செலவைக்குறைக்க ஆலோசனைசொல்ல ஓர் கமிட்டியை நியமித்திருக்கிறார். கமிட்டியின் யாதாஸ்தை அறியஆவல்மிகவும் அதிகந்தான். ஆனால்...............

* * *

### புதிய இயக்கம்.

சமீபகாலத்திற்குள் பர்மிய ஸ்திரீசமூகங்களுக்குள் பலவகைப்பட்ட இயக்கங்கள் தோன்றியிருக்கின்றன. அவற்றில் சில ராஜீய சம்பந்தமானவை மற்றவை தங்கள் சமூக அபிவிருத்தியை முன்னிட்டு தோன்றி யிருக்கின்றன. தற்போது மற்றுமொரு புதியஇயக்கம் தோன்றியிருக்கின்றது.

பந்தாநு என்ற கிராமத்தில் 80 ஸ்திரீகள் ஓர் மகாசாடுகூடி தங்களுக்கென ஓர் சபை ஸ்தாபித்துக்கொண்டு கலப்பு விவாகம் தங்கள் சமூகத்திற்கு குறைவு எனக்கொண்டு பர்மியஜாதிக்குள்ளேயே விவாகம் நடைபெற வேண்டுமென்றும் அன்னியநாட்டு சாமான்களை பகிஷ்கரிக்கவேண்டு மென்றும், சர்க்கார் நியாயஸ்தலங்களுக்குப் போகாமல் சகல வழக்குகளையும் தங்களுக்குள் பஞ்சாயத்து மூலம் தீர்த்துக்கொள்ள வேணடு மென்றும், ஆபரணங்கள்முதலியவைகள் தரிப்பதில்லையென்றும்,லாகிரிவஸ்துக்களை விலக்குவதென்றும் மாட்டுமாமிசம் சாப்பிடக்கூடாதென்றும் தீர்மானித்திருக்கிறார்கள். இதுவும் ஒரு காலந்தான்.

## நமது மித்திரன்
# விசேஷப் போஷகப்பிரபு.

இரங்கூன், பிரபல வர்த்தகரும், இட்டமொழியூர் ஹைஸ்கூல் ஸ்தாபகரும், பர்மா, சட்டநிரூபணசபை அங்கத்தினரும், லக்ஷாதிபதியுமான ஸ்ரீமான் A. V. ஜோசப் நாடார் அவர்கள்.

## போஷகப் பிரபுக்கள்.

:()*():

மதுரை ஜில்லா, பொட்டிப்புரம் ஸ்ரீமான் அ. இருளப்ப நாடார்.
உசிலம்பட்டி, ஸ்ரீமான் முதலாளி ப. வீ. ஆதிமூத்துமாலை நாடார்.
மதுரை, ஸ்ரீமான் G. ஜோசப் நாடார் B. A. B. L.
சென்னை, நாட்டாண்மை ஸ்ரீமான் கா. ஆறுமுக நாடார்.
சென்னை, ஸ்ரீமான் ஆ. ப. வை. கோதண்டராம பாண்டிய நாடார்.
கொழும்பு, ஸ்ரீமான் சி. பொ. ம. பொன்னையா நாடார் அன் பிரதர்ஸ்.

திருநெல்வேலி ஜில்லாவில்.

சுவிசேஷபுரம், ராவசாகிப் டாக்டர் ஸ்ரீமான் J. S. லாமேக் நாடார்.
ஆறுமுகநேரி, ஸ்ரீமான் சு. சி. பொன்னுச்சாமி நாடார்.
இட்டமொழி, ஸ்ரீமான் A. யேசுவடியான் நாடார்.
மணக்காடு, ஸ்ரீமான் ரா. பொன்னையா நாடார்.
நாதன்கிணறு, ஸ்ரீமான் S. தங்கச்சாமி நாடார்.
கீழமங்கலூர், ஸ்ரீமான் த. ரா. ஜெயமணி நாடார்.
ஊத்தங்கரைவிளை, ஸ்ரீமான் ரா. உலகநாத நாடார்.
கிழவனேரி, ஸ்ரீமான் க. ம. அந்தோணிமுத்து நாடார்.
நாங்குனேரித் தாலுகா புதூர், ஸ்ரீமான் ரா. பாக்கியநாத நாடார்.
ஆறுமுகநேரி. ஸ்ரீமான் ஆ. பொ. தங்கராஜ் நாடார்.
பொம்மடிக்கோட்டை, மெஸ்ஸாஸ் ச. தங்கப்பாண்டி நாடார் அன் பிரதர்ஸ்.
கடுவக்குரிச்சி, ஸ்ரீமான் ந. நி. வெள்ளையா நாடார்.
மணக்காடு, ஸ்ரீமான் ஆ. சாமிநாத நாடார்.
இட்டமொழி, மெஸ்ஸர்ஸ் N. சாலோமோன் நாடார் அன்பிரதர்ஸ்.
சாத்தான்குளம், ஸ்ரீமான் தே. பே. மரியராயப்ப நாடார்.
வெள்ளாளன்விளை, ஸ்ரீமான் யோ. யோசேப்பு நாடார்.
மாணுதெண்டுப்பத்து, ஸ்ரீமான் கு. ந. நவமணி நாடார்.
இராஜாவின்கோவில், ஸ்ரீமான் செ. சுடலைமுத்து நாடார்.
திருநெல்வேலி, ஸ்ரீமான் அரி. அ. செண்பக நாடார்.
மாணுதெண்டுப்பத்து, ஸ்ரீமான் சோ. செல்லத்துரை நாடார்.
திருப்பாப்பு நாடார்விளை, ஸ்ரீமான் மா. நா. ரு. நாராயண நாடார்.
சிறுநாடன் குடியிருப்பு, ஸ்ரீமான் வே. வே. சுடலைமாட நாடார்.
பெரியதண்டம்வடலி, ஸ்ரீமான் நா. ஆறுமுகநயினார் நாடார்.
சிறுநாடன்குடியிருப்பு, ஸ்ரீமான் இ. அய்யங்கண் நாடார்.
சிறுநாடன்குடியிருப்பு, ஸ்ரீமான் சு. குருஸ்வாமி நாடார்.
உடையார்குளம், ஸ்ரீமான் ஞா. யோசேப்பு நாடார்.

இராமநாதபுரம் ஜில்லாவில்.

வையூர், ஸ்ரீமான் வை. மு. முத்துக்குமார் நாடார் அன் பிரதர்ஸ்.
இலுப்பையூர், ஸ்ரீமான் பு. கு. அ. கணபதி நாடார் அன் பிரதாஸ்
புத்தாதிபுரம், ஸ்ரீமான் கு. பி. பொன்னையா நாடார் அன் பிரதர்ஸ்.
முத்தாதிபுரம், ஸ்ரீமான் பெ. ப. சின்னக்காளை நாடார் அன் பிரதர்ஸ்.
முதுகுளத்தூர், ஸ்ரீமான் மா. கருப்பையா நாடார்.
அகத்தாயிருப்பு, ஸ்ரீமான் மா. க. ராமசுவாமி நாடார்.
மேட்டுப்பட்டி, ஸ்ரீமான் பெ. பிச்சார் நாடார்.
அகத்தாயிருப்பு, ஸ்ரீமான் த. வ. சீ. கிருஷ்ண நாடார் அன் பிரதர்ஸ்.
கீழப்பெருங்கரை, ஸ்ரீமான் பெ. ச. மாடசாமி நாடார் அன் பிரதர்ஸ்.
செட்டியபட்டி, ஸ்ரீமான் செ. அ. சந்திவீர நாடார்.
இலுப்பையூர், ஸ்ரீமான் வே. பொன்னையா நாடார்.
பழையனூர், ஸ்ரீமான் செ. மு. சிவன் நாடார் அன்பிரதர்ஸ்.
எலிங்காயக்கன்பட்டி, ஸ்ரீமான் கி. ஆ. காமாக்ஷி நாடார்.
இலுப்பையூர், ஸ்ரீமான் மா. க. மதளைக்கருப்ப நாடார்.
வளநாடு, ஸ்ரீமான் சி. சாமியய்யா நாடார்.
முத்தாதிபுரம், ஸ்ரீமான் பெ. சி. ப. மூத்தையா நாடார்.
வடபட்டி. ஸ்ரீமான் அ. க. வேலாயுத நாடார்.
சிவகாசி, ஸ்ரீமான் M. தருமராஜ் நாடார் B. A. B. L.
விருதுபட்டி, ஸ்ரீமான் க. கு. பொன்னப்ப நாடார்.
அருப்புக்கோட்டை, முதலாளி ஸ்ரீமான் மு. மு. முத்துக்குமாரசாமி நாடார்.

Tamil Heritage Foundation International - Digital Library EBook collection